விலை 15/-

# சாளரம்

இளையோர் திங்களிதழ்



## பொசினியாவின் சோகம் தீருமா?





## போசாக்குப் பூங்காவில் பூக்களாய் சிரிக்கும் குழந்தைகள்

பொது

மழை

பெப்ரவரி - மார்ச்

1994

யாழ் குடாநாட்டில் பின்வரும் விற்பனை நிலையங்களில் சாளரம் சஞ்சிகையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை | — யாழ்நகர் |
| தமிழ்த்தாய் புத்தகசாலை | — யாழ்நகர் |
| ஆனந் புத்தகசால | — யாழ்நகர் |
| யாழ் புத்தகசாலை (புதியபஸ்நிலையம் முன்பாக) | — யாழ்நகர் |
| வசந்தம் புத்தகசாலை (புதியபஸ்நிலையம் முன்பாக) | — யாழ்நகர் |
| அறிவரன் புத்தகசாலை | — யாழ்நகர் |
| அறிவுச்சோலை (வேப்படி) | — யாழ்நகர் |
| சிறீகாந் புத்தகசாலை | — நல்லூர் |
| கனகா ஸ்ரோர்ஸ் | — திருநெல்வேலி |
| ராம்கரன் புத்தகசாலை | — திருநெல்வேலி |
| சிவன் ஸ்ரோஸ் (பல்கலைக்கழகம் முன்பாக) | — திருநெல்வேலி |
| செந்தமிழ் சோலை (பல்கலைக்கழகம் முன்பாக) | — திருநெல்வேலி |
| நாவலர் புத்தகசாலை | — மந்திகை |
| மொடேன் ஸ்ரோர்ஸ் | — நெல்லியடி |
| உதயன் புத்தகசாலை | — பருத்தித்துறை |
| ...கும் புத்தகசாலை | — சாவகச்சேரி |
| ...கேஸ்ஸ் | — சாவகச்சேரி |
| ...லை | — கொக்குவில் |

... தங்களது பாடசாலைகள் ஊடாக சாளரத்தைப் ...பாடசாலைகளில் சாளரம் பெற்றுக்கொள்ள ...வுசெய்து தங்களது பாடசாலையின் விபரத் ... கொள்ளவும்.

சாளரம் கதவு 3 (24) காற்றலை 8

# காலப்பதிவு

இளைஞர்கள் தங்களது எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும். காலத்தைப் பதிவு செய்யும் படைப்புக்களை அவர்கள் உருவாக்கவேண்டும்.

இங்கு சகல துறைகளிலுமுள்ள இடைவெளிகளை நிரப்ப இளைய சமுதாயத்தையே இம் மண் அதிகம் எதிர்பார்த்து நிற்கிறது.

சமகாலப் பிரச்சினைகள் இலக்கியமாகவேண்டும் என்கிற தேவையொன்றுள்ளது.

நாம் ஒடுக்கப்படுவதும், அதற்கெதிராகப் போராடுவதுமே இக்காலத்தின் முக்கிய பிரச்சினையாகும்,

போராட்டம்-வீரம்-தியாகம், போர்ச்சூழலில் வாழும் மக்களது அன்றாட துன்பங்கள் - இழப்புகள் - வேதனைகள், அவற்றினையும் எதிர்கொண்டு தொடரும் அவர்களது வாழ்வின் நகர்வு, போன்றவற்றை கூர்மையாக அவதானித்து, கலை நுட்பத்துடன் செய்யப்படுகின்ற பதிவே இலக்கியமாகிறது.

ஓர் இலக்கியப்படைப்பாளிக்கு திறமையுடன் அவதானிப்பு, பொறுப்புணர்வு, தேடல் என்பனவும் அத்தியாவசியமாகிறது.

இலக்கியத்தினூடாக பல செய்திகள் சொல்லப்படுகின்றன. ஆனால், வெறும் செய்திமட்டும் இலக்கியமாகாது.

அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்க 'காலப்பதிவு' தேவையெனில் தினசரிப்பத்திரிகைச் செய்திகளையே தொகுத்து ஆவணமாக்கலாம். அவை நிலையான ஓர் ஆவணமாகாது.

எழுதுகோல் ஏந்தும் இளைஞர் இதனைக்கவனத்தில் கொள்ளவேண்டும்.

பல நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளும், போராட்டங்களும் இலக்கியங்களினாலேயே இன்றும் நிலைத்து நிற்கின்றன.

பல்லாண்டுகளுக்குமுன் நடந்தவற்றை இன்று படித்து விட்டு உணர்வுவசப்படுகிறோம்; மனதில் ஓர் உந்துதல் பெறுகின்றோம் என்றால், அந்த இலக்கியப் பதிவின் நுட்பமே அதற்குக் காரணம்.

அனுபவத்துடன் நல்ல நூல்களைத் தேர்வுசெய்து படிப்பதன் மூலம் எமது எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளமுடியும். போராட்ட இலக்கியங்களைத் தேடி வாசிப்பதன் மூலம் நாமும் சிறந்த போராட்ட இலக்கியங்களை உருவாக்க முடியும்.

காலங்காலமாக நிலைபெற்று நிற்கக்கூடிய காலப்பதிவுகளை எமது எதிர்கால சந்ததிக்கு வழங்கவும் முடியும்.

## இந்த இதழில்..


- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ உளவியல்
- ☐ உதைபந்தாட்டம் உலகக்கிண்ணம்
- ☐ சமூகவியல் ஓர் அறிமுகம்
- ☐ அடிப்படை உரிமைகள்
- ☐ புதிய சந்ததி பூக்துக் குலுங்க போஷாக்குப் பூங்கா
- ☐ திராட்சைப் பழமும் அதன் மருத்துவமும்
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ கவிதை
- ☐ தமிழ்மொழியின் வளர்ச்சியில் பிறநாட்டு நிலையிலான பங்களிப்பு
- ☐ மொழிபெயர்க்கும் கணனி
- ☐ கார்ல் மாக்ஸ்
- ☐ அரும்புகள்
- ☐ இன்றைய யாழ்நகர்
- ☐ எரிமலையைச் சுற்றி 36 கோடி மக்கள்
- ☐ அறிவுலகம்
- ☐ தெரிந்து கொள்ளுங்கள்
- ☐ ஆங்கிலம் கற்போம்
- ☐ சிறுகதை
- ☐ தெறிப்பு
- ☐ இலக்கியத்திறனாய்வு நோபல் பரிசுபெறும் கறுப்பினப் பெண் எழுத்தாளர்
- ☐ பொது அறிவுப் போட்டி.


ஒன்றின் தோல்வி மற்றொன்றின் வெற்றி. ஒன்றின் அழிவு மற்றொன்றின் ஆக்கம். ஒன்றின் ஒடுக்கம் மற்றொன்றின் தோற்றம். இந்த அழிவு, ஆக்கங்களிலிருந்தே மனிதனுடைய எண்ணம், சக்தி, செயல் எல்லாம் வளர்ச்சியடைந்து வருகின்றன.

— கார்ல் மாக்ஸ்

# சிந்தனைக் குழப்பமும், தவறான நம்பிக்கைகளும்

மனநோயின் ஆரம்ப அறிகுறிகளில் ஒன்று சிந்தனைக் குழப்பமாகும். (Thouht Disturbance) மனநோய் உள்ளோரின் சிந்தனையானது அவரது அறிவிற்கும் அனுபவத்திற்கும் பொருத்தமற்றதாக இருக்கும். பொரும்பாலும் இவர்கள் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பார்கள். நிறைவேறாத ஆசைகளை தன் கற்பனைகள் மூலம் நிறைவேற்றிக் கொள்வார்கள். இவர்களது பேச்சில் வழக்கில் இல்லாத புதுவார்த்தைகளும் எதுகைமோனைகளும் நிறைந்திருக்கும். கூறும் விடயத்தில் ஒன்றுக்கொன்று தொடர்பிருக்காது. சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வர். பலவிடயங்களை பேச்சில் கலந்துபேசுவர்.

இது தவிர ஒரு பொருளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது, அதை விட்டுவிட்டு திடீரென்று இன்னொரு பொருளைப் பற்றிப் பேசுவார். பேச்சில் அதிக வேகமும் இரைச்சலும் இருக்கும். சிலசமயம் பேசிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று பேச்சை நிறுத்திவிடுவார்கள். வெறித்த பார்வையுடையவர்களாகவும் இருப்பார்கள். சில சமயம் லேசான ஞாபகமறதியும், பிறர் சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரிந்துகொள்வதில் குழப்பமும், ஒரு பொருளின் பெயரைச் சொல்வதில் சிரமமும் இருக்கும்.




## தவறான நம்பிக்கைகள் (DELUSIONS)

சிந்தனைக் குழப்பத்தில் தவறான நம்பிக்கையானது மிகவும் முக்கியமான அம்சமாகும். அதுதான் நோயாளியையும், மற்றோரையும் வெகு சிரமத்திற்கு ஆளாக்கும் அறிகுறி. இத்தகைய நம்பிக்கை, நோயாளியின் கல்வியறிவிற்கும், கலாசார பழக்கவழக்கத்திற்கும் சற்றும் பொருந்தாமல் இருக்கும். இந்த நம்பிக்கை தவறானது என்பதை காரணங்களோடு விளக்கிச் சொன்னாலும் கூட நோயாளியின் மனதிலிருந்து அதை அகற்றமுடியாது.

மற்றவர்கள் செய்யும் எந்தக்காரியமும் தன்னைத் துன்புறுத்த அல்லது கொலைசெய்ய என்று எண்ணி நம்புவது (Persecutory Delusion) தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு அங்கமும் தனக்கு கேடு உண்டாக்கவே இருக்கிறது எனக் கருதுவது போன்றவை சந்தேகத்தின் பாற்பட்ட தவறான நம்பிக்கைகளாகும்.

தன்னைப்பற்றி உயர்வாக எண்ணிக்கொள்ளல், உதாரணமாக தன்னை கடவுளின் மறு அவதாரமென்றோ அல்லது தன்னை ஒரு நாட்டின் பிரதம மந்திரி என்று உயர்த்திக்கூறுவதோடு அதனை முழுமையாக நம்பவும் செய்தல். இது தவிர பிறர் தன்னை அடக்கி ஆள்வது போலவும் (Delusion of Control) தன்னைப்பற்றி மற்றவர்கள் அவதூறாகப் பேசுவதாகவும், கெட்டநோக்கோடு பார்ப்பதாகவும் கூறுவது (Delusion of Reference) முதலானதவறான நம்பிக்கைகளாகும். மேலும் சிலர் தங்கள் மனதில் உள்ள எண்ணங்களை எவரோ கட்டுப்படுத்துவதாகவும், கருவிகள் மூலம் கவர்வதாகவும் கூறுவர். வேண்டாத எண்ணங்களை பிறர் தங்கள் மனதில் பலவந்தமாகத் திணிப்பதாகவும் கூறுவர். மற்றும் சிலர் தமக்கு புற்றுநோய், காசநோய், பால்வினைநோய் போன்ற சில பயங்கரமான நோய்கள் இருப்பதாக நம்பி துன்புறுவர் (Delusion of illness) வேறு சிலர் தான் மிகமோசமானவர்கள் கொடும்பாவங்கள் செய்தவர்கள் என்று நம்புவர் (Delusion of Sinsndguilt) அதனால் தாம் கடுமையான தண்டனைக்குரியவர்களென்றும் சொல்லுவர். விரைவில் தமக்குத் தண்டனை கிடைத்துவிடும் எனவும் நம்புவர். சில நோயாளிகள் தம்மைச்சுற்றி இருக்கும் எல்லாமே உயிரற்றுப்போய்விட்டதாகவும் செயல் இழந்துவிட்டதாகவும் (Nihilistic Deluseon) கூறுவர். இதுதவிர சிலர் தனது மனைவியோ, அல்லது காதலியோ நடத்தை கெட்டவர்கள் என்று கூறுவர். தன் உணவிலே நஞ்சு கலந்திருக்கிறதென்றும், தனது எதிரிகள் தனக்கு மந்திரம், செய்வினை செய்து தன்னைக் கொல்வதற்கு முயற்சிப்பதாகவும் கூறுவார்கள், அளவுக்கதிகமான சந்தேகம்மிக்கவர்களாக நடந்து கொள்வார்கள். (Paranoid Delusion) இதனால் மிகவும் உணர்ச்சிவசப்படுவார்கள்.

சிலர் அர்த்தமற்ற பயத்துடன் இருப்பார் (Phobia) தனியறையொன்றில் இருக்க, இருளைக்கண்டால், மாடிக்கட்டிடத்திலோ, உயரமான இடத்திலோ இருந்தால், புதிய மனிதர்கள் எவரையும் கண்டால், ஏதும் மிருகங்களைக் கண்டால் இவர்களுக்குத் தேவையற்ற அச்சம் ஏற்படும். அதிகமான தேவையற்ற பயம் கொள்ளுதல் மனநோயின் முக்கியமான அறிகுறியாகும்.

இதுதவிர சிலருக்கு தம்மால் தடுக்கமுடியாத அளவிற்கு சில கெட்ட எண்ணங்களும், உணர்ச்சிகளும் (Obsession) மனதிலே வினாடிக்கு வினாடி உண்டாகும். அவை தவறானவை என நோயாளி நன்கு உணர்ந்தாலும்கூட மாற்றமுடியாது. அவ்வெண்ணங்கள் அந்தளவு சக்திவாய்ந்தவையாகவும், அவற்றால் மனதிற்கு மிக்க சஞ்சலம் ஏற்படுவதாகவும் கூறுவர். உதாரணமாக மிகவும் நெருங்கிய ஒருவரை, குறிப்பாகத் தனது குழந்தையை கழுத்தை நெரித்துக் கொன்றுவிடவேண்டும் என்ற ஒரு எண்ணம் மனநோயாளியான ஒரு தாயின் மனதில் உண்டாகலாம். இப்பயங்கரமான எண்ணத்தால் ஏற்படும் மன உளைச்சலைத் தடுக்கவும், தாங்கிக் கொள்ளவும் மனதினை வேறு திசையில் திருப்ப ஏதாவது ஒரு செயலில் ஈடுபடவும் வாய்ப்பு உண்டு. மணிக்கணக்கில் கைகளைச் சுத்தம் செய்வது அல்லது ஏதாவது ஒரு செயலைத் திரும்பத் திரும்ப அர்த்தமில்லாமல் செய்துகொண்டிருப்பது போன்

(31-ஆம் பக்கம் பார்க்க)

# உதைபந்தாட்டம் - உலகக்கிண்ணம்

**10ம்** நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் யுத்தத்தில் தோற்றுப்போன எதிரியின் மண்டை யோட்டை உடைத்து விளையாடிய ஆங்கிலேய வீரர்களினால் ஆரம்பிக்கப்பட்ட உதைபந்து இன்று அநேக ரசிகர்களைக் கவர்ந்துகொண்டு சர்வதேச தரத்தை அடைந்துள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி இவ்வருடம் ஐக்கிய அமெரிக்க நாட்டில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றிபெறும் நாட்டிற்கு 'சர்வதேச உதைபந்தாட்ட ஒருங்கிணைப்பு கிண்ணம், வழங்கப்படும். இது 18.5கிலோ தங்கத்தால் ஆக்கப்பட்டது. 1982ம் ஆண்டுவரை இக்கிண்ணம் 'யூல்ஸ்றிமெற்' கிண்ணம் என அழைக்கப்பட்டு வந்தது 1929ம் ஆண்டு பார்சிலோனா நகரில் நடைபெற்ற சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கூட்டத்திலேயே உலக கிண்ணத்துக்கான போட்டி நடத்துவது எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய 1930 இல் நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணப் போட்டி 'உருகுவே' நாட்டில் நடாத்தப்பட்டது. இப்போட்டிகளில் ஐரோப்பிய அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த (13) பதின்மூன்று நாடுகள் கலத்து கொண்டன. அதுவரை உதைபந்தாட்டம் சர்வதேசரீதியில் ஒலிம்பிக்போட்டியில் மட்டுமே நடாத்தப்பட்டு வந்தது. உலகக் கிண்ணம் போட்டிகள் 1950-ம் ஆண்டு முதல் 'நெக்கவுட்' முறைக்கு மாற்றப்பட்டது. 112 நாடுகள் கலந்துகொள்ளும் இப்போட்டியின் இறுதிச் சுற்றுக்கு 24 நாடுகளே தெரிவு செய்யப்படும். கடைசியாக நடந்து முடிந்த போட்டியின் சம்பியன் நாடும் போட்டி நடைபெறும் வரவேற்புநாடும் நேரடியாகவே இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும். ஏனைய 22 நாடுகளும் சர்வதேச உதைபந்தாட்டச் சங்கத்தில் உள்ள 6 ஒருங்கிணைப்பு சங்கங்களால் குழுநிலைப் போட்டிகள் மூலம் தெரிவுசெய்யப்படும் ஐரோப்பிய ஒருங்கிணைப்பு சங்கத்தின் மூலம் 13 நாடுகளும், தென் அமெரிக்க ஒருங்கிணைப்பு சங்கத்தின் மூலம் 4 நாடுகளும், வட அமெரிக்க சங்கத்தின் மூலம் ஒருநாடும், ஆசிய ஒருங்கிணைப்பு சங்கத்தின் மூலம் 2 நாடுகளும் ஆபிரிக்க சங்கத்தின் மூலம் 2 நாடுகளும் தெரிவுசெய்யப்படும். இவ்வருட உலகக் கிண்ணத்திற்கான ஒருங்கிணைப்புச்சங்க தேர்வுப் போட்டிகள் யாவும் கடந்த வருடம் நவம்பரில் நடந்துமுடிந்துவிட்டது. தென்கொரியாவும், சவுதி அரேபியாவும் இவ்வருட உலகக் கிண்ணப்போட்டிக்காக ஆசியப் பிராந்தியத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடுகளாகும், இவ்வருடம் யூன் மாதம் முதல் நடைபெறும் போட்டியில் யார் வெற்றி வாகை சூடுவார்கள் என்பதை முழு உலகமுமே ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் உள்ளது.




**கடந்தகால சம்பியன்கள்:-**

| நடைபெற்ற ஆண்டுகள் | | நடைபெற்ற இடங்கள் | சம்பியன் நாடுகள் |
|---|---|---|---|
| 1930 | | உருகுவே | உருகுவே |
| 1934 | | இத்தாலி | இத்தாலி |
| 1938 | | பிரான்ஸ் | இத்தாலி |
| 1942 | 2 ம் உலகயுத்தம் | போட்டி நடைபெறவில்லை | ——— |
| 1946 | 2 ம் உலகயுத்தம் | போட்டி நடைபெறவில்லை | ——— |
| 1950 | | பிரேசில் | உருகுவே |
| 1954 | | சுவிற்சலாந்து | மேற்குஜேர்மனி |
| 1958 | | சுவீடன் | பிரேசில் |
| 1962 | | சுவீடன் | ,, |
| 1966 | | இங்கிலாந்து | இங்கிலாந்து |
| 1970 | | மெக்சிக்கோ | பிரேசில் |
| 1974 | | மேற்குஜேர்மனி | மேற்குஜேர்மனி |
| 1978 | | ஆர்ஜென்ரீனா | ஆர்ஜென்ரீனா |
| 1982 | | இத்தாலி | இத்தாலி |
| 1986 | | மெக்சிகோ | ஆர்ஜென்ரீனா |
| 1990 | | இத்தாலி | மேற்குஜேர்மனி |
| 1994 | | ஐக்கிய அமெரிக்கா | ———? |

அ. அன்ரன் அன்பழகன்,
உருத்திரபுரம் ம. வி.




க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# ஃபிறீஸ்ரைல் மல்யுத்தம் (FREESTYLE WRESTLING)

இந்த யுத்தம் சர்வதேசப் பொழுதுபோக்கு; மல்யுத்த சமாசத்தின் (International Amateur Wrestling Federation) மேற்பார்வையின்கீழ் ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மூன்றுபாணியில் (Style) இது புரியப்படுகிறது. அவையாவன:

1. ஃபிறீஸ்ரைல் (Freestyle)
2. கிறெக்கோ றோமான் ஸ்ரைல் (Greco - Roman style)
3. சம்போ ஸ்ரைல் (Sambostyle)

மல்யுத்தம் பண்டைக்கால விளையாட்டுகளில் ஒன்றாகும். கிறெக்கோ றோமன் ஸ்ரைல் விளையாட்டிற் கால்களைப் பாவிக்கக்கூடாது.



சர்வதேசப் போட்டி விதிகளின்படி நேர்மையான பிடிகளும் (Fair Holds) காலை இடறல் (Trip) அல்லது தூக்கியெறிதல் (Throw)என்பனவும் அனுமதிக்கப் படுகின்றன. கழுத்தை நெரித்தல்போன்ற உயிராபத்தான பிடிகள், உடற்கூறுகளுக்குத் தீமை விளைவிக்கும் பிடிகள், அத்துடன் காலால் உதைத்தல் கையாற் குத்துதல், தலையால் இடித்தல், ஆடையை பிடித்துஇழுத்துப் பிடித்தல் என்பவையும் தடை செய்யப்பட்டுள்ளன. ஒழுங்கீனங்களைக் கைக்கொள்ளக்கூடாதென மல்யுத்த வீரர்கள் போட்டியின் ஆரம்பத்தில் எச்சரிக்கை செய்யப்படுவர். மூன்று தடவைகள் எச்சரிக்கைக்கு ஆளாகும் வீரர் போட்டியிலிருந்து விலக்கிவைக்கப்படுவார் (Disqualified). பாரதூரமான பிழையைவிட்டால் உடனடியாகவே போட்டியிலிருந்து விலக்கிவைக்கப்படுவார்.

ஒரு சுற்று ஆட்டம் (Bout) (1967 லிருந்து) 9 நிமிடங்கள் நீடிக்கும். இந்த 9 நிமிடங்களும் மும்மூன்று நிமிடக் காலப்பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இந்தக் காலப்பகுதிகளுக்கிடையில் 1 நிமிட இடைவேளை விடப்படுகிறது. ஒவ்வொரு 3 நிமிட ஆட்டத்தையும், போட்டியாளர்கள் தாங்கள் இடைவேளைக்கு முன்னையகாலப் பகுதியில் நின்ற நிலையிலில்லாது (பூட்டு, பிடிகள் என்ற நிலையிலில்லாது) நிமிர்ந்து நின்றவாறு (Standing Position) ஆரம்பிப்பர்.

மேடையில் றெவ்றி (Referee) ஒருவரும் மேடைக்கு வெளியில் நடுவர்கள் (Judges) மூவரும் நேரப்பதிவாளர் (Time Keeper) ஒருவரும் போட்டியை மேற்பார்வையிடுகின்றனர். மேடையில் எதிரியை மல்லாத்தி (முதுகுப் புறம்) அவரின் இரு தோள்களையும் ஒரு வினாடிவரை தரையுடன் அமர்த்திப்பிடித்து வைத்திருப்பாராயின் அவருக்கு வெற்றியும் மற்றவருக்குத் தோல்வியுமாகும். மல்லாத்திப்பிடித்தலை 'ஃபோல்' (விழுதல் - Fall) எனக் கூறுவர். ஃபோல் ஒன்றை அறிவிப்பதற்கு றெவ்றி மேடையிற் கையாற் தட்டி அறிவிப்பார். எதிரியை வீழ்த்தியதை ஃபோல் எனக் கணிக்காதவிடத்து மல்லாத்துவதற்கு முயற்சித்துள்ளாரெனக்கருதி நடுவர்கள் (Judges) அவருக்குப் புள்ளிகளை வழங்குவர்.

மல்யுத்தத்திற்காக அமைக்கப்படும் அரங்கு மெத்தைபோன்ற தளத்தையும் 6 மீற்றர் சதுரத்தையும் உடையதாகும். நிலத்திலிருந்து அதன் உயரம் 1.1 மீற்றருக்குக் கூடுதலாக இருக்கக்கூடாது. ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப்போட்டிகளுக்கான அரங்கின் பரப்பு 8 சதுர மீற்றராகும்.

ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளுக்குப் போட்டியாளர்கள் அவர்களின் நிறையின் அடிப்படையிற் பிரிக்கப்படுகின்றனர். விவரம் வருமாறு:

| | |
|---|---|
| லைற் ஃபிளை வெயிற் | (Light Fly Weight)48 கி.கி. |
| ஃபிளை வெயிக் | (Fly Weight) 52 கி. கி. |
| பன்ரம் வெயிற் | (Bantam Weight) 57 கி. கி. |
| ஃபெதர் வெயிற் | (Feather Weight) 63 கி. கி. |
| லைற் வெயிற் | (Light Weight) 70 கி. கி. |
| வெல்ரர் வெயிற் | (Welter Weight) 78 கி. கி. |
| மிடில் வெயிற் | (Middle Weight) 87 கி. கி. |
| லைற்ஹெவி வெயிற் | (Light Heavy Weight)97கி.கி. |
| ஹெவி வெயிற் | (Heavy Weight) 100 கி. கி |
| சுப்ப ஹெவி வெயிற் | (Super Heavy Weight) 100 கி. கி. க்கு மேலாகும். |

போட்டியாளன் எந்தவொரு போட்டியிலும். ஒரு பிரிவில் மட்டுமே போட்டியிடலாம்.

மேற்கூறியவைபோன்ற பாணியில் ஐக்கிய அமெரிக்கக் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் மல்யுத்தப் போட்டிகள் நடைபெறுகின்றன. இக் கல்விக்கூடப்போட்டிகளில் நிறையின் அடிப்படையில் போட்டியாளர்களைப் பிரிப்பது மேற்கூறிய முறையிலிருந்து வேறுபட்டதாகும். போட்டிகள் பெரும்பாலும் உண்மையான போட்டியாக இல்லாது பார்வையாளருக்கு உற்சாகமூட்டுவனவாக இருக்கும்

## டூலியற்றிள் ஜேம்ஸ் (DOOLITTLE JAMES)

இவர் அமெரிக்க வான்படையின் வெகு சாமர்த்தியமான வல்லுநராகத் திகழ்ந்து 1942 இல் ஜப்பானுக்கு ஓர் அதிரடிப்பாடம் புகட்டிப் பிரபலமடைந்தவராவார். 1896 டிசம்பர் -14-ம் திகதி அலமேடா என்னும் அமெரிக்க ஊரிற் பிறந்து, கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் பயின்றுபட்டம் பெற்று, முதலாம் உலகப் போரின் போது இராணுவத்திற் சேர்ந்து கொண்டார். வான்படைப் பிரிவில் பணியேற்ற இவர் வானூர்திகள் பற்றிய விடயங்களில் பிரமிக்கத்தக்க அறிவு கொண்டிருந்தார்.

முதலாம் உலகப்போர் முடிந்த பின்னரும் வான்படைப் பிரிவில் இருந்த இவர் 'கேம்பிறிட்ஜ்' என்னுமிடத்திலுள்ள தொழில்நுட்ப நிறுவனத்தில் பிரயோகப் பொறியியலில் கலாநிதிப்பட்டம் பெற்றார். தொடர்ந்தும் இராணுவத்தில் பணி புரிந்த இவர் வானூர்திகளை இயக்குதல், இயக்கிக் காண்பித்தல், பரிசோதித்துப் பார்த்தல், வேக ஓட்டம் நடாத்திப்பார்த்தல் ஆகியவற்றில் தனது கவனத்தைச் செலுத்தினார். 1932-ல் உலகின் அதிவேக விமான ஓட்டி என்ற சாதனையை வென்றார்.

# சமூகமயமாகுதல்

## சமூகவியல் ஓர் அறிமுகம் - 3

ஒரு குழந்தை பிறக்கும் போது முற்றிலுமே தங்கிவாழும் நிலையில்தான் பிறக்கின்றது. கண்ணுக்குத்தெரியாத, புலப்படாத, பெற்றோர்களிடமிருந்து பரிமாறப்பட்ட உள்ளார்ந்த ஆற்றல்களைத் தவிர அக்குழந்தையிடம் வேறொன்றும் இருக்காது சமூகத்தில் ஏற்புடையவனாகவாழ இக்குழந்தை மீது எவ்வாறான செல்வாக்குகள் செலுத்தப்பட வேண்டும்?எவ்வகையான விடயங்களை உடலின் வளர்ச்சியோடு விட்டுவிடலாம்.? கற்பித்தலின் வாயிலாக எவ்வகையான விடயங்கள் உட்புகுத்தப்பட வேண்டும்? இம்மாதிரியான கேள்விகளுக்கு விடைகாண்பது சமூகவியலின் முக்கிய பங்கு ஆகின்றது.

கடலில் வாழுகின்ற ஆமை, முட்டையிடும் காலம் வந்ததும், கரையில் ஏறி, முட்டைகளை இட்டு மணலினால் மூடிவிட்டு மீண்டும் கடலுக்குள் போய்விடுகிறது. காலம் வந்ததும் முட்டையை உடைத்துக்கொண்டு ஆமைக்குட்டி வெளியேறி, நேராகக் கடலிற்குள் செல்கின்றது. இச் செயற்பாடானது அவைகளுக்கிருக்கின்ற இயல்பூக்கத்தினால் நடைபெறுகின்றது. ஏனைய உயிரினங்கள் இயல்பூக்கத்தின் வாயிலாகவே தமது செயற்பாடுகளைச் செய்கின்றன. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்து இடம்பெயர்ந்து வரும் வாத்துக்கள், அழகானதும் சிக்கலானதுமான கூடுகளை கட்டிவாழும் தேனீ, தூக்கணாங்குருவி, கறையான் போன்றவையும் இயல்பூக்கத்தினாலும், சூழலுக்கேற்ப இசைவாக்கம் செய்வதனாலும் உயிர்வாழுகின்றன. ஆனால் மனித குழந்தை இப்படி உருவாகுவதில்லை. குழந்தையானது ஏனையோரில் தங்கியே வாழவேண்டும். அப்படித் தங்கிவாழும் போது குழந்தையானது சமூகத்தில் ஏற்புடையதாக வாழ உருவாக்கப்படுகின்றது. இச் செயற்பாட்டினை நாம் சமூக மயமாக்கல் எனக்கூறுகின்றோம். குழுக்கள் சக்திவாய்ந்த ஆசிரியர்கள் என்பதும், சிறுவர்கள் கற்பதற்கு ஆவலுடையவர்கள் என்பதும் உண்மையே. சில பழக்கங்கள் ஆழமாக உள்வாங்கப்பட்டிருப்பதினால், அவை பெரும்பாலும் சிந்திக்காமல், பொறிமுறையாகச் செயற்படுகின்றன. உதாரணமாக ஒருகுழந்தை தானாக உண்ண முற்படும் போது வாய்க்குள் உணவைச்சீராகச் செலுத்தாது பல தடவை கொட்டிச் சிதறி உண்பதைக் காணலாம் அதனால் தொடர்ச்சியான முயற்சியின் பின்உணவை வாய்க்குள் சீராகச் செலுத்தும். மேலும் உணவை வாய்க்குள் செலுத்துவது ஒரு பொறிமுறை சார்ந்த செயலாக, அதாவது எண்ணிச் செய்யாத செயலாக நடைபெறுகின்றது. இது சமூகமயமாக்கலின் ஓர் அம்சம் எனக் கூறலாம். பல்வேறுபட்ட பண்பாட்டின் அடிப்படையில் உணவு எவ்வாறு உண்பது என்பதில் வேறுபாடுகள் உள. உதாரணமாக, தெற்காசிய நாடுகளில் கையால் உண்பதும், கீழத்தேய நாடுகளில் இரண்டு தடிக்குச்சிகளை உபயோகித்தும், மேற்கு நாடுகளில் கரண்டி உபயோகிப்பதும், மாறுபட்ட பண்பாட்டுக்கோலங்களை வெளிப்படுத்துகின்றன.

ஒரு குழந்தை, தன்னை ஆண் அல்லது பெண், என்று இனங்கண்டு அதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியதும் பல தரப்பட்ட கேள்விக்கணைகளைத் தொடுக்கும். மற்றவர்கள் தன்னிடமிருந்து எவ்வாறான நடத்தையை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப நடக்கத் தெண்டிப்பார்கள். இதுவும் சமூக மயமாக்கலின் ஆரம்பச்செயற்பாடுகளில் ஒன்றாகும்.

குழந்தை வளர்ந்துவரும்போது தனது தொடர்புகளை பரவலாக்கத்தொடங்கும். சகோதரர்கள், அயலில் உள்ள சிறுவர்கள், விளையாட்டுக்குழுக்கள், பள்ளிச்சிறார்கள், பாடசாலை நண்பர்கள், என்று பலவாறு வேறுபடும். இவைகள் சமூகமயமாக்கலில் ஈடுபடும் முகவர்கள் எனக் கருதப்படுகின்றது.

ஓர் ஆண் குழந்தைக்கு தந்தையின் பிரசன்னம் மிகவும் முக்கியம் என ஆய்வுகள் கூறுகின்றன. பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறுவர்கள் பெரும்பாலும் பொறுப்புள்ள தந்தையின் செல்வாக்கைப் பெறாதவர்கள் என அறியப்படுகின்றது. இன்று நமது நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டமானது, சிறுவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு சக்தியாக உள்ளது என்பதை நாம் அவதானிக்கலாம். இதுவும் சமூகமயமாக்கலின் ஒரு வெளிப்பாடே. வீட்டில் அன்பாகவும் சீராகவும் வளர்க்கப்பட்ட பிள்ளைகள், பள்ளியில் ஆசிரியரைத் திருப்திப்படுத்துபவர்களாகவும், வெகு விரைவில் பல நண்பர்களைக் கொண்டவர்களாகவும் இருப்பர் என அறியப்படுகிறது.

பெற்றோரின் செல்வாக்குப் பின்னடைய, ஆசிரியரினதும் சகபாடிகளினதும் பாடசாலைப் பருவத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துவிடுகிறது. குமரப் பருவம் சகபாடிகளைத் திருப்திப்படுத்துகின்ற பருவமாக மாறிவிடுகின்றது. எந்தச் சமூகத்தை எடுத்துப் பார்த்தாலும் இப் பருவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணலாம்.

சமூகமயமாக்கலில் சகபாடிகளின் பங்கு மிகவும் கூர்ந்து நோக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் பெற்றோரின் செல்வாக்குக் குறைந்து, சகபாடிகளின் செல்வாக்கு வலுப்பெறுகின்ற காலகட்டம் குமரப்பருவமாகும். எதற்கும் துணிந்து செயற்படுகின்ற எண்ணம் உருவாகின்ற பருவம். 'இளங்கன்று பயம் அறியாது' என்று கூறப்படுவது குமரப்பருவத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. புதிய விழுமியங்கள், ஒழுக்கவிதிகள் போன்றவற்றையும் தமக்கென இப்பருவம் உருவாக்கியிருக்கும். ஒரு சில சந்தர்ப்பங்களில் இச்சகபாடிக் குழுக்கள் வன் குழுக்களாகவும் மாறுவதும் உண்டு. ஆனால் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றையே மாற்றி சுதந்திர தாகத்தை ஏற்படுத்தியதில் குமரப்பருவத்தினர் முக்கிய பங்களிப்பு செய்து வருகின்றனர்.

''ஸ்ரீ''



ஆ. நாகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்...

# தரமான அரிசி வகைகளுக்கு

## இணுவிலில்

# கற்பகம் அரிசி ஆலை

அரிசி வகைகளில் புழுங்கல் அரிசியே உடல் நலத்திற்கு உகந்தது, தவிடு முற்றாக நீக்கப்பட்ட அரிசியில் எமது உடலுக்குத் தேவையான போசாக்குச்சக்தி கிடைக்காமல் போய்விடுகிறது. எனவே, நெல்லைப் பதமானமுறையில் போசாக்குடன் கூடியதாக அரிசியாக்குவதில் அரிசி ஆலைகளின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

# கற்பகம் அரிசி ஆலை

கற்பகப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்.

# அடிப்படை உரிமைகள்

பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து உலகெங்கும் அடிப்படை உரிமை பற்றிய கருத்துக்கள் பிரபல்யமடையத் தொடங்கின. இவ் அடிப்படை உரிமைகள் நான்காகப் பிரித்து நோக்கப்பட வேண்டியன. அவையாவன.

1. குடியியல் உரிமைகள்.
2. அரசியல் உரிமைகள்.
3. பொருளாதார உரிமைகள்.
4. நீதி உரிமைகள் என்பனவாகும்.

குடியியல் உரிமைகள் என்பது விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், ஆதரிக்கவும் உள்ள உரிமை, விருப்பிய மொழியைப் பேச உள்ள உரிமை, விரும்பிய இடத்திற்கு பிரயாணம் செய்ய உள்ள உரிமை, விரும்பிய இடத்தில் வசிப்பதற்கான உரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை போன்றனவாகும்.

அரசியல் உரிமைகள் என்பவை வாக்களிக்குமுரிமை, ஊர்வலங்கள் நடத்துகின்ற உரிமை, ஊர்வலங்களில் கலந்துகொள்ளுகின்ற உரிமை, ஊர்வலங்களுக்கு தலைமை தாங்குகின்ற உரிமை, கட்சிக் கொடியை வைத்திருக்கும் உரிமை, கட்சிக் கொடியை விற்கும் உரிமை, விரும்பிய கட்சிக்காக பிரச்சாரம் செய்யுமுரிமை துண்டுப் பிரசுரங்களை வெளியிடுமுரிமை, கட்சியைத் தோற்றுவிக்குமுரிமை, வேட்பாளனாக நிற்குமுரிமை, ஆட்சியமைக்குமுரிமை என்பனவாகும்

பொருளாதார உரிமைகள் எனப்படுபவை விரும்பிய தொழிலைச் செய்யுமுரிமை, விருப்பிய இடத்தில் தொழில் செய்யுமுரிமை, விரும்பிய அளவு முதலீடு செய்யுமுரிமை விருப்பியளவு சொத்துக்களை வைத்திருக்குமுரிமை, தொழிற்கட்சியை ஆதரிக்கும், அமைக்கும் உரிமை, தொழிலாளர் போராட்டம், வேலைநிறுத்தம் பகிஸ்கரிப்பு போன்றவற்றைச் செய்யுமுரிமை என்பவற்றைக் கூறலாம்,

நீதி உரிமைகள் என்பவை கண்டபடி கைது செய்யப்படாதிருப்பதற்கான உரிமை, குற்றவாளிகளை தண்டனைக்குட்படுத்தும் உரிமை, நிரபராதி தண்டிக்கப்படாதிருப்பதற்கான உரிமை, காரணமின்றி தடுத்து வைக்கப்படாதிருப்பதற்கான உரிமை, நீதி வேண்டி வாதாட சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான உரிமை, மேன்முறையீடு செய்வதற்கான உரிமை, விசாரணைக்குட்படுத்தாமல் தடுத்துவைக்கப்படாதிருப்பதற்கான உரிமை ஆகியனவாகும்.

மேற்கூறப்பட்ட உரிமைகளை தாராள ஜனநாயக அரசுகள் (U S A, U K) தமது பிரசைகளுக்கு பூரணமாக வழங்குவதனூடாக முதலாளித்துவ பொருளாதாரத்தை சிறப்பாக வளர்ப்பதில் வெற்றி காண்கின்றன. இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று கூறப்பட்டாலும் மேற்கூறப்பட்ட அடிப்படை உரிமைகளை பிரசைகளுக்கு வழங்கவில்லை. இலங்கைக் குடியரசு இதுவரை இரு பெரும் யாப்புக்களை வரைந்தளித்துள்ளது. அவையாவன 1972 ம் ஆண்டு 1ம் குடியரசு யாப்பு. 1978ம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பு என்பனவாகும்.

1972 ம் ஆண்டு யாப்பு தமிழ் மக்களின் உரிமைகளை சிறிதும் மதிக்கவில்லை பௌத்த மதத்திற்கு சிறப்புரிமைகொடுத்த இந்த யாப்பு சிங்களமொழியை மட்டும் அரசகரும மொழியாக்கியது. மேலும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மக்களின் அடிப்படை உரிமையைப் பறித்து 1972 ம் ஆண்டு யாப்பின் அடிப்படை உரிமை என்ற அத்தியாயத்தின் 18 ம் சரத்து 2 ம் பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

"தேசிய ஒற்றுமையும், தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொதுப்பாதுகாப்பு, பொதுஒழுங்கு, பொது சுகாதாரத்தைப் பாதுகாத்தல், நன்னடத்தை, மற்றவர்களுடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாத்தல், அரச கொள்கையின் தத்துவங்களை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் நலனை முன்னிட்டு அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் கட்டுப்படுத்தப்படலாம்"

மேற்கூறிய யாப்புவிதி அடிப்படை உரிமைகளை முற்றாக தடைசெய்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்குவதாக இருக்கும். இது போலவே 1978 ம் ஆண்டு 2 ம் குடியரசு யாப்பு தமிழ் மக்களின் உரிமையை அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்ற போர்வையில் பறித்தது. குற்றவியல் நிவாரணங்களை நீதிமன்றங்கள் மூலம் பெற முடிந்தாலும் தேசத்துரோகக் குற்றம் என்ற ரீதியில் தமிழ் மக்களிற்கு நீதிமன்றங்கள் கூட நீதி வழங்குவதை தடை செய்வதாக 1978 ம் ஆண்டு யாப்பு காணப்படுகின்றது.

திரு. யோ. ஜெயகாந்தன் B A
(அரசறிவியல் சிறப்பு)

## இலக்கியம்

எண்ணங்களை தூய்மைப்படுத்துவது, உணர்வுகளை நெறிப்படுத்துவது, பண்புகளைச் செம்மைப்படுத்துவது நல்லதன் நலனும், தீயதன் தீமையும் இவையென இனம் காட்டுவது இலக்கியம் ஒன்றுதான். சமகாலச் சமுதாயம் படைப்பாளியின் மனதில் ஏற்படுத்தும் சலனங்களையே அவன் இலக்கியமாகப் பதிவு செய்கிறான். எனவே இலக்கியங்கள் ஒரு வகையில் காலப்பெட்டகங்களாகும். இலக்கியவாதிகள் அனைவரின் நோக்கமும், மண் பயனுற வேண்டும் என்பது தான். குறிக்கோளில்லாத படைப்பாளி, விளைவுகளை ஏற்படுத்தாத படைப்பு காலவெள்ளத்தில் காணாமல் போய்விடுவது சரித்திரம் கூறும் உண்மையாகும்.

# வங்காள விரிகுடா (BAY OE BENGAL)




இது இந்து சமுத்திரத்தின் வடகிழக்கிலுள்ள ஒரு விரிகுடாவாகும், உலகிலுள்ள மற்றைய விரிகுடாக்களுடன் ஒப்பிடும்போது இது பரந்தது. ஆனால் ஆழம் குறைவானது. 8,39,000 சதுர மைல் பரப்பளவை உடையது.

இதனைச் சுற்றியுள்ள நாடுகள் - மேற்கில் இந்தியாவும் இலங்கையும், வடக்கில் வங்களாதேசம், கிழக்கில் மியன்மாரும் (பர்மா) மலாயாக் குடாநாட்டின் வடபகுதியும் உள்ளன. தெற்கில் அதன் எல்லையாக கற்பனையான கோடுள்ளது. அக்கோடு தென் இலங்கையின் தேய்வேந்திர முனையிலிருந்து (Dondra Head) சுமத்திராவின் வடபகுதி முனைவரை செல்வதாகக் கற்பனைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தமான், நிக்கோபார் தீவுகளே இவ்விரிகுடாவிற் காணப்படும் பிரதான தீவுகளாகும். இலங்கையின் மகாவலி கங்கை, இந்தியாவின் கங்கை கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, பங்களாதேசத்தின் கங்கை, பிரமபுத்திரா, மியன்மாரின் ஐராவதி, மீகொங் போன்றபிரதான ஆறுகள் இவ்விரிகுடாவிற் கலக்கின்றன.

இதன் சாராசரி ஆழம் 2600 அடி. ஆகக்கூடுதலான 14,764 அடி ஆழம் நிக்கோபார் தீவுக்கும் சுமந்திராவிற்கும் இடையிலுள்ளது. வடக்கே இதன் எல்லையாக 100 மைல் அகலமான கண்டத்திட்டு உள்ளது. இத்திட்டு கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரமாக ஒடுங்கிச்செல்கிறது.

சர்வதேச இந்துசமுத்திர ஆராய்ச்சி நிலையம் (Inter National Indian Ocean Expedition) நடத்திய ஆழ்கடல் ஆராய்ச்சிகளின் பயனாக இதன் கடலடியில் மலைத்தொடர்கள், ஒடுங்கிய செங்குத்தான பள்ளத்தாக்குகள், ஆழமான வாய்க்கால்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1963-ம் ஆண்டில் ஆந்திரா மாநிலக் கரையோரத்திற்கப்பாலும், காகினாடா - சென்னைக்கரையோரத்திற்கப்பாலும் ஒடுங்கிய செங்குத்தான பள்ளத்தாக்குகள் (Canyons) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கரையோரத்திற்கப்பால் இதன் மேற்பரப்பில் எல்லாப் பருவகாலங்களிலும் வெப்பநிலை சமமாகவே உள்ளது. இருப்பினும் வடக்குநோக்கிச் சிறிது சிறிதாகக் குறைந்து செல்கிறது. பருவக்காற்றுக் காலங்களில் இக்கடலில் தாழ் அமுக்கங்கள் நிலைகொள்வதனால் இதனை அண்டிய நிலப்பரப்பின்மேல் சூறாவளிபோன்ற அதிவேகத்துடன் புயற்காற்றுக்கள் வீசுகின்றன. இவை மழையுடன் வீசுவதால் வெள்ளப்பெருக்கு மற்றும் இயற்கைவள அழிவுகள் / சேதங்கள் ஏற்படுகின்றன. தமிழீழத்தில் மாரிகாலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் பெரும்பாலும் இடம் பெறுகின்றன.

விரிகுடாவின் மேற்குக் கரையோரங்களில் குறிப்பாக ஆந்திராக் கரையோரத்தில் கனிவளம் உள்ள மணற்பரப்புக்கள் உள்ளன. இவற்றில் ''மாங்கனீஸ்' என்ற கனிப்பொருள் அபரிமிதமாகக் காணப்படுகின்றது.

## சர்வதேச நீதிமன்றம்

சர்வதேச நீதிமன்றம் ஐக்கியநாடுகள் சபையினுடைய உறுப்பு நாடுகளினிடையே உள்ள வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கிறது. இதில் 15 நீதிபதிகள் உள்ளனர். ஒரு நாட்டிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் இருப்பதில்லை. இங்கு பணியாற்றும் நீதிபதி தனது நாட்டின் பிரதிநிதியல்ல. அவர் அனைத்து நாடுகளின் பிரதிநிதியாகவே பணியாற்றுவார். பொதுச்சபையும், பாதுகாப்புச் சபையும் சேர்ந்து நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. சர்வதேச நீதிமன்றத்தில் ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும் தான் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

க. நகேனேந்திரன்
நுநாறி மரத்தடி
கொக்குவில்.

# புதியசந்ததி பூத்துக் குலுங்க போசாக்குப் பூங்கா

பொம்மை வெளியில் இயங்கிவரும் 'சிறுவர் போசாக்குப் பராமரிப்பு பூங்கா' கடந்த தைப் பொங்கல் தினத்தன்று தனது முதலாம் ஆண்டு நிறைவினை குதூகலமாக கொண்டாடியது.

1993ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று இப்'பூங்கா' ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறுப்பிட்டி, சுன்னாகம், நாவற்குழி, கைதடி, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் இது செயற்பட்டு வருகின்றது.

சிறிலங்கா அரசின் தமிழர் மீதான அடக்கு முறைகள் இன்று பல்வேறு வழிகளில் பரிணாமம் பெற்றுள்ள இவ்வேளை தமிழர் மண்ணை ஆக்கிரமிப்புச் செய்தல், தமிழ் மக்களை நினைத்தவாறு அழித்தல், துன்புறுத்தல், கைது செய்தல் என ஆரம்பித்த, இராணுவத்தின் நகர்வுகள் போராளிகளால் முடக்கப்பட்டதும், வானூர்திகளைக் கொண்டும், எறிகணைகள் கொண்டும் தாக்கியழித்தல் தொடர்கிறது. இவற்றையெல்லாம் விட பொருளாதாரத் தடைமூலம் தமிழரைப் பட்டினி நிலைக்குள்ளாக்கி துன்புறுத்தல் - இன்று அரசின் முக்கிய செயற்பாடாக தொடர்கின்றது.

பொருளாதாரத் தடை மூலம் போசாக்கற்ற பலவீனமான இளம் சமுதாயமொன்றை தமிழர் மண்ணில் தோற்றுவிப்பதும் சிறிலங்கா அரசின் மோசமான நோக்கங்களில் ஒன்றாகும்.

தமிழீழத்தில் இன்று நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சாதாரண மக்கள் தமது தினசரி வாழ்வை நகர்த்திச் செல்வதில் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந் நிலையில் தங்கள் குழந்தைகளை சரியான முறையில் வளர்த்தெடுக்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. உடல், உள, அறிவு ரீதியான ஆரோக்கியத்துடன் குழந்தைகள் உருவாகுவது முடியாத நிலையில் உள்ளது.

இக்கட்டத்தில், பின்தங்கிய கிராமப்புறங்களில், எவ்வித பொருளாதார அடித்தளமுமற்ற வசதிகள் குறைந்த குடும்பங்களிலுள்ள குழந்தைகளை சத்துணவூட்டி வளர்த்தெடுக்கும் நடவடிக்கையே சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் திட்டமும், நோக்கமும் ஆகும்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களது பணிப்பின் பேரிலேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அமுல் நடத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

'சிறுவர்கள் தமது எதிர்காலத்திற்கான அடித்தளமிடத் தெரியாதவர்கள். தமது முன்னேற்றங்களைப்பற்றியோ, வளர்ச்சிகளைப் பற்றியோ சிந்திக்கும் ஆற்றலற்றவர்கள். நோயின்மையைப்பற்றி, உடல் நலனைப் பற்றி, கல்வியறிவுப் பற்றி, ஒழுக்கப்பண்புகள் பற்றி அக்கறைப்படத் தெரியாதவர்கள். அவர்களைச் சரியான முறையில் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு எங்களைச் சார்ந்தது. எமது தேசத்தின் இளம் சந்ததியை ஆரோக்கியமான நற்பிரசைகளாக உருவாகக்வேண்டிய கடப்பாடு எமது சமூகத்தின் கைகளில் உள்ளது. தமது அடிப்படையான கடமைகளில் ஒன்றான இதனைச் செய்ய எமது சமூகம் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கு முன்மாதிரியாக நடந்து, முன்னுதாரணமாகச் செயற்பட்டு எங்கள் இயக்கம் இதனை மேற்கொள்ளும்போது காலவோட்டத்தில் இப்பணியோடு மக்கள் தம்மை இணைத்துக் கொள்வார்கள்'- இது தலைவர் அவர்களது கருத்தாகும்.

சிறுவர் உடல் நலத்தை மேம்படுத்துவதற்கான ஊட்டச்சத்துள்ள உணவு வகைகளை வழங்குவதே இப் பூங்காக்களின் அடிப்படையான திட்டம் எனினும், அதன் சேவை அத்துடன் நில்லாமல் உடற்பயிற்சி மூலம் நோயற்ற தேகாரோக்கியம், அடிப்படைக்கல்வி, பொது அறிவு, ஒழுக்கம் போன்றனவும் போதிக்கப்படுகிறது.

'சாளரம்' சார்பாக பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவிற்கு சென்றோம். சுமார் நூறு வரையிலான சிறுவர் சிறுமியர் நீலநிற சீருடையுடன் உற்சாகமாகக் காணப்பட்டனர். அனைவரும் இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகள் இருபத்தைந்து குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் நான்கு ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். பூங்கா நிர்வாகி உட்பட சமையலாளர், பராமரிப்பாளர், கணக்காளர், காவலர், பண்ணை உதவியாளர் போன்றோரும் பணி புரிகின்றனர்.

இல்லம் நேர்த்தியாக்கப்பட்டு இயற்கைச் சூழலை அழகுபடுத்தும் தாவரங்கள், மலர்த்தோட்டங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் அவதானிப்பும் அழகுணர்வும் வெளிப்படும் வகையில் புறா, தாரா போன்ற பறவையினங்களும் முயல்போன்ற பிராணிகளும் வளர்க்கப்படுகின்றன.

சுமார் பத்துப்பரப்பு அளவுள்ள காணியில் விளையாட்டரங்கு அமைக்கப்பட்டு ஊஞ்சல், துலா அமைப்பு, சமநிலை அமைப்புகள், ஏறி இறங்கும் ஏற்றங்கள் என்பனவும் அமைக்கப்பட்டு நீல வண்ணத்தில் காட்சி தருகின்றன.

நிலையத்தில் சமயலறை, உணவறை, பராமரிப்பு அறை, வகுப்பறை, காரியாலய அறை ஆகிய பகுதிகள் காணப்படுவதோடு வகுப்பறைகளில் கட்புலச் சாதனங்களும் காணப்படுகின்றன.

இச்சிறுவர் போசாக்குப் பூங்காவில் உள்ள சிறுவர் சிறுமியர் முகங்களில் எவ்வித சோகமும் இல்லை. தங்கள் வீடுகளில், பெற்றோர், சகோதரர்களுடன் இருப்பது போலவே, சகசிறுவர், சிறுமியருடனும், ஆசிரியர்களுடனும், பராமரிப்பாளருடனும் மகிழ்வோடு சிரித்து ஆடிப் பாடிக் களிக்கின்றனர்.

மொத்தத்தில் உடல் ஆரோக்கியத்தோடு, உள, கல்வி, பண்பாட்டு ஆரோக்கியமும் வழங்கும் போசாக்குப் பூங்காவாக இது திகழ்கிறது.

# பூங்கா சிறுவர்களின் பாடல்



ஏடு தூக்கும் சிறுவரே
நாடு காக்க எழுவீரே
பாடுபட்டு உழைத்திடின்
பயன் பெறுவோம் உறுதியே


தோல்வியடைய நேரிடின்
துவண்டு போதலாகுமோ?
தோல்விதானே வெற்றியின்
தொடக்கப்படிகள் ஆகுமே!

ஏடு கூறும் உண்மையை
ஏற்று நாமும் நடந்திடின்
நாடு உயரும் அத்துடன்
நாமும் உயர்வோம் நிச்சயம்.

ஏடு தூக்கிப் பள்ளியில் - இன்று
படிக்கும் சிறுவர் நாம்
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறோம்.



போசாக்கு மிக்க சிறுவர்களது முகங்கள்



ஆசிரியர், பராமரிப்பாளர்களுடன்



...க்கு இல்லத்தின் முன் பாக

## சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காக்களின் குறிக்கோள்கள்

1. பாதிப்புற்றுள்ள சிறுவர் வாழும் பிரதேசங்களையும் குடும்பங்களையும், சிறுவர்களையும் இனங்காணல்.
2) இனங்காணப்பட்ட பிரதேசங்களின் முன்னுரிமை அடிப்படையில் போசாக்கு இல்லங்களை அமைத்தலும், சிறுவருக்கு போசாக்கு உணவு வழங்கி உடல் ஆரோக்கிய முறச் செய்தலும்.
3) சிறுவர்களின் உடல் நலத்தைப் பாதிக்கும் நோய்களிலிருந்து பாதுகாத்தலும், நோய்வாய்ப் பட்டோர்களுக்குரிய சிகிச்சைகள் மூலம் உடல் நலம் பேணுதலும்.
4) உடல் நலத்தைப் போலவே உள நலமும் முக்கியமாதலால் சிறுவரின் உளநலனைப் பேணுதல், உளவளர்ச்சிக்கு உதவுதல்.
5) போசாக்குப் பூங்காவிற்கு வரும் சிறுவர்களின் கல்வி விருத்திக்கான முன் பள்ளிக் கல்வியை ஏற்பாடு செய்தல்.
6) சிறுவர் பள்ளிக்குச் செல்லும் காலம் வரையிலான முன் பள்ளிக் கல்வியை தொடர்ந்து கற்க ஏற்பாடுகள் செய்தல்.
7) சிறுவர் பூங்காவிற்கான காய்கறி, பால், தானியங்களைப் பெறுவதற்கேற்ற சுயதேவை நிறைவுப் பண்ணைகளை அமைத்தல்.
8) தமது பிள்ளைகளின் உடல் உள நலத்தைத் தாமே பேணிக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்குமான கல்வியறிவை பெற்றோரிடம் விருத்திசெய்தல்.
9) நிலையங்களில் கடமையாற்றும் பொறுப்பாளர், பராமரிப்பாளர், ஆசிரியர், பண்ணை உதவியாளர், சமையலாளர், ஏனையோரின் வினைத்திறன் அதிகரிக்கும் வகையிலான சேவைக்காலக் கல்வியளித்தல்.
10) பாதிப்புற்றுள்ள சமூக அங்கத்தவர்களுக்காக உழைக்கும் உதவும் சமூக உணர்வை யாவரிடமும் வளர்த்தெடுத்தல். தமது நாட்டின் தேசிய இறைமைக்கும் விருத்திக்கும் பாடுபடக்கூடிய ஆரோக்கியமான அறிவியல் மிக்க இனப்பற்றுள்ள கூட்டுணர்வுடையோராய் ஆக்குதல்.

# திராட்சைப்பழமும் அதன் மருத்துவமும்

சுவை மிகுந்த பழவகைகளில் திராட்சைப் பழமும் ஒன்று. சுவை மட்டுமன்றி சத்துக்கள் நிரம்பியதும். மருத்துவத்தன்மையுடையதாகவும் திராட்சை விளங்குகிறது. பெர்சி இனத்தைச் சேர்ந்த இப்பழ வகையானது பச்சை, கறுப்பு சிவப்பு, நீலம் என பல நிறங்களில் கொத்துக் கொத்தாக காய்க்கும்.

எகிப்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட 8000 வருடங்கள் பழமையான கல்வெட்டுக்களில் திராட்சைப் பழ வடிவம் செதுக்கட்பட்டுள்ளது. இதிலிருந்து இப் பழம் எவ்வளவு பழமையான, உயர்வான பழம் என்பதை அறிய முடிகிறத. இக்கொடியானது சம தட்ப வெப்பமுள்ள பிரதேசங்களில் தான் பெரும்பாலும் வளருகிறது. இதன் தாயகம் காகேசியா. அயினும் உலகின் பலபாகங்களிலும் இப்பொழுது இது பயிராகிறது.

திராட்சையில் குளுக்கோஸ் எனும் சர்க்கரைச் சத்து மிகுதியாகவுள்ளது. பழத்தில் வகைக்கேற்ப இதனளவு 15 முதல் 25 சதவிகிதம் வரை மாறுபடும். குளுச்கோஸ் எளிதில் உடலில் உட்கிரகிக்கக் கூடிய தன்மையைப் பெற்றுள்ளதால் சாப்பிட்ட சில நிமிடங்களுக்குள் கலந்து உடலுக்குத் தேவையான உடனடி சக்தியையும் வெப்பத்தையும் அளிக்கிறது.

திராட்சையின் நோய்தீர்க்கும் பண்பு அதிலடங்கியுள்ள தூய்மையான குளுக்கோஸின் அளவைப் பொறுத்து அமைகிறது. இதன் காரணமாகவே துயரங்களுக்கு திராட்சைப்பழம் ஏற்றதாகக் கருதப் படுகிறது. அஜீரணம், பலவீனம், குடல் உபாதைகளுக்குத் திராட்சை மிகச்சிறந்த நன்மை தருகிறது.

## மலச்சிக்கல்

திராட்சையில் காணப்படும் செல்லுலோஸ், குளுகோஸ் மற்றும், ஓர்கானிக் அமிலம் போன்றவை திராட்சையை ஒரு மலமிளக்கியாகச் செயற்பட உதவுகிறது திராட்சை வயிற்றையும் குடலையும் ஒழுங்குற இயங்கத் துணைபுரிவதுடன் மலக்குடலில் காணப்படும் கழிவுகளை உடனுக்குடன் அகற்றி உடலிலிருந்து வெளியேற்றி தூய்மைப்படுத்துகிறது. திராட்சைப்பழங்கள் புதிதாகக்கிடைக்காத பட்சத்தில் உலர்ந்த திராட்சைப்பழங்களை உட்கொள்ளலாம்.

## அஜீரணக்கோளாறு

உணவு சமிபாடடைய திராட்சைப் பழம் பெரிதும் உதவுகிறது இது வயிற்றில் ஏற்படும் அஜீரணத்தைக்கட்டுப்படுத்தி சமிபாட்டை சீர்செய்து வெப்பத்தை வெளியேற்றுகிறது.

## சிறுநீர்க்கோளாறு

திராட்சையிலுள்ள பொட்டாசியம் மற்றும், நீர்ச்சத்து சிறுநீர் எளிதாகப்பிரிவதற்குத் துணை செய்கின்றன. இதில் காணப்படும் சிறு அளவு அல்பியூமின் (Albumin) மற்றும் சோடியம் குளோரைடு சிறுநீர் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்கு வகை செய்கின்றன. மேலும் திராட்சைப்பழம், சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பையில் ஏற்படும் கற்களைக் குணப் படுத்தும் சிறந்ததோர் உணவுப் பொருளாகக் கருதப் படுகிறது.

## ஆஸ்த்துமா

ஆஸ்துமாவுக்காக மேற்கொள்ளப்படும் சிகிச்சையில் திராட்சைப்பழங்களும் அதன் சாறும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. ஓல்ட்பீல்ட் (Dr. Oldfield) என்கிற மருத்துவியலாளர் ஆஸ்துமாவால் துயரடைவோரை திராட்சைத்தோட்டத்தில் இருக்குமாறுசெய்தால் விரைவில் அவர்கள் நோயிலிருந்து நலம் பெற்றுவிடுவார்கள் என்று தான் எண்ணுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிப்புண் (EXTERNAL SORES)

உடலுக்கு வெளியில் ஏற்படும் புண்களைக் குணப்படுத்த திராட்சையின் சக்கை (Pouttice) உதவுகிறது. திராட்சைப்பழங்களை சிறுதுண்டுகளாக்கி அவற்றை நசித்து மெல்லியதுணிக்கிடையே பரப்பி பொதி போன்று செய்ய வேண்டும். இதைப்புண் ஏற்பட்டிருக்கும் பகுதியில் வைத்து அதன்மேல் உலர்ந்த துணி கொண்டு கட்டிவிடவேண்டும். இக் கலவையானது புண்ணின் மீது படிந்துள்ள நச்சினை அப்படியே உறிஞ்சி எடுப்பதால் அடிக்கடி இக் கலவையை மாற்றுதல் வேண்டும்.

எமது மண்ணிலும் தாராளமாக கிடைக்கக் கூடிய திராட்சைப்பழங்களின் மேற்படி மருத்துவத் தன்மைகளை நாமும் பயன்படுத்திக்கொள்வோம்.

யாழ் நகரில் 'நியூஸ் பிறின்ட்' மற்றும்

காகிதாதிகள் விற்பனையில் பிரபலம் பெற்றவர்கள்

## 'சிங்கம் இன்டஸ்றீஸ்'

**பத்திரிகை ஸ்தாபனங்கள்,**
**சஞ்சிகை நடாத்துபவர்கள்**
**அச்சக உரிமையாளர்கள்**
**தங்களது எல்லாவிதமான**
**காகிதத் தேவைகளுக்கும்**
**எம்மைநாடி வரலாம். நாம்**
**நியாயமான விலைகளில்**
**இவற்றை உங்களுக்கு**
**வழங்குகிறோம்.**

# சிங்கம் இன்டஸ்றீஸ்

**1029/03 காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

க. நகனேந்திரா
பூநாறி மரத்தடி
கொக்குவில்

க. சுபாஸ்கரன்
ஆண்டு 13
உடுப்பிட்டி அமெ. மி. கல்லூரி.


கே: மாணவர்களின் கல்வியில் பெற்றோரா ஆசிரியர்களா முக்கியமானவர்கள்?

ப: தமதுபிள்ளை படிக்க வேண்டும் என அவர்களை பாடசாலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் முதலில் முக்கியமானவர்கள். பாடசாலை சென்றதன்பின் அவர்களைக் கல்வியில் உயர்த்தும் ஆசிரியரின் பணி முக்கியமானது. ஆரம்ப அறிவு வளர வளர மேலும் வளர முனையும் மாணவரது தனிப்பட்ட முயற்சி முக்கியமானது. எனவே, பெற்றோர் - ஆசிரியர் - மாணவர் ஆகிய முத்தரப்பு முயற்சிகளும் கல்விக்கு முக்கியமானது. எமது யாழ்ப்பாண சமூகத்தைப் பொறுத்தவரையில் ஒரு மாணவன் எந்தப் பாடசாலையில் படிக்கவேண்டும், எந்தத் துறையில் படிக்க வேண்டும், வருங்காலத்தில் அவன் எந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்பவற்றை எல்லாம் பெற்றோரே தீர்மானிக்கின்றனர். கலைத்துறையில் இயல்பான ஆர்வமுள்ள ஒருமாணவன் பெற்றோரின் கட்டளையினால் விஞ்ஞானத் துறைக்குப்போய் சில சமயம் தோல்வியுறவும் நேருகிறது. பெற்றோரது கனவை நனவாக்கும் முயற்சியில் அவனுடைய எதிர் பார்ப்புக்கள், விருப்பங்கள் யாவும் கனவுகளாகிவிடுகின்றன. மாணவரின் இயல்பான திறமைகளை அவதானித்து அதை நோக்கி அவர்களை வளர்த்தெடுப்பதே பெற்றோரின் பணியாக இருத்தல் வேண்டும்

மா. கலையரசி
யா/சித்திவிநாயகர்வித்தியாலயம்
சுப்பர்மடம், பருத்தித்துறை.

கே: சிறீலங்கா அரசு தனதுபடையின்மூலம் தமிழ் மக்களையும், தமிழரின் சுதந்திரத்தையும் அடக்கி அழித்து விடலாமென இனியும் பகற்கனவு காணுமா? கற்பனைக் கோட்டை கட்டுமா?

ப: பல பாடங்கள் படித்தபின்பும் கனவு காண்பதும் கற்பனைக்கோட்டை கட்டுவது மான சிறீலங்கா அரசின் போக்குதொடர்ந்துகொண்டு தானிருக்கின்றது.'நாற்காலிக் கனவு'களில் மயங்கி நடமா




டும் சிங்கள அரசியல் வாதிகள் பதவிகளை மையமாக வைத்தே சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். தாங்கள் பதவிக்கடலில் குளித்து சுகம் காண்பதற்காக மக்கள் குருதியில் குளித்துக் கொண்டிருப்பதை விரும்புகின்றனர்.காலம்நல்ல பதில்சொல்லும். அவர்களது கனவுகள் கற்பனைகள் யாவும் தகர்ந்து சிதறும்.

வே. பவதாரணன்
வீரபத்திர கோவில் தெற்கு
உடுப்பிட்டி.

கே: யாழ். மாணவர்களின் கல்வித்திறன் வீழ்ச்சியடைந்து வருகிறது. என்று கூறப்படுகிறதே? பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில் இவ்வாறு கூறப்படுவதை ஏற்றுக்கொள்ளலாமா? அல்லது, உண்மையிலேயே கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகிறதா?

ப: ஒருவரின் ஆளுமையையும், திறமையையும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வைத்து எடைபோட முடியாது.

எனினும், காலையில் பாடசாலை, பின்னேரம் தனியார் கல்விநிலையம், இரவில் வீட்டில் தனிப்பட்ட வகுப்பு என இயந்திரம் போல் சுழலும் எமது மாணவர்கள் பரீட்சைப் பேறுகளில் வீழ்ச்சி கண்டுள்ளமை கவலை கொள்ளக்கூடிய விடயம்தான்.

வே. தவச்செல்வம்
பளை ம. வி.
(ஆண்டு 12, கலைப்பிரிவு)

கே: ஒரு மனிதனுக்கு அன்பு என்பது எப்படி இருக்கவேண்டும்?

ப: மனிதனானவன் முதலில் பிறரை நேசிக்கப்பழகவேண்டும். நேசிப்பில் இருந்தே அன்பு உதயமாகிறது.

சுகனியா வைற்றஸ்
யாழ்.திருக்குடும்பகன்னியர்மடம்,
ஆங்கிலப்பாடசாலை.

கே: எம்நாட்டில் (தமிழீழத்தில்) உளவாளிகள் உருவாகக் காரணம் என்ன?

ப: சொந்தமண்மீதோ, சொந்த மக்கள்மீதோ எவ்விதப் பற்றும் இல்லாதவர்கள்; பணத்திற்காகவும் சுயநலத்திற்காகவும், சுகபோகங்களுக்காகவும் எதையும் செய்யத் துணிந்தவர்கள், இவர்கள் எளிதில் பகைவனிடம் விலை

போய் விடுகின்றார்கள். இவர்களே காட்டிக்கொடுக்கும் உளவாளிகளாகின்றார்கள்.

க. நவநாதன் உடுத்துறை

கே: அரசியல்வாதிக்கும் போராளிக்கும்உள்ளவித்தியாசம் என்ன? இருவருக்குமே அரசியல் இலக்கை அடைவதுதானே நோக்கம்?

ப: சாதாரண அரசியல்வாதிக்கும் போராளிக்கும் குறிப்பிட்ட தமது இலக்கை அடைவதுதான் நோக்கம் எனக்கொண்டாலும் செயற்பாட்டில் வித்தியாசங்கள் உள்ளன.

உதாரணமாக- ஓர் அரசியல்வாதி மக்கள்முன் மேடையில் ஏறி "மக்களுக்காக எனது இரத்தத்தையும் சிந்தத் தயாராக இருக்கிறேன்" எனப்பேசுவான் ஆனால், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே விரும்புவான். போராளியோ நடைமுறையில் இரத்தம் சிந்திக் கொண்டே இருப்பான். அவன் இலக்கை அடைய தன்னை இழப்பதற்கும் தயாராகவே இருப்பான்.

## இவனைக் காப்பாற்றுங்கள்

(ஜனவரி மாத ஓவியத்திற்கான பரிசுக் கவிதை)

கல்வி - இங்கே
புத்தகச்சுமையாகிறது - அதனால்
இவனது அசைவுகள்
குறுகிய வட்டத்திற்குள்ளேயே...
உலகத்தை இவன் புத்தகத்தில் பார்க்கின்றான்
சமூகத்தை இவன் பார்க்க நேரமோ
கிடைப்பதில்லை.

பட்டங்கள் பின்னாலிருப்பினும் – அதுவும்
வெறும் ப(ட்)டமாகவே...
நூலளவில் இவனுடன் ஒட்டிக்கொள்ளும்
பட்டம் எங்கேயோ இவன் எங்கேயோ.

நித்தம் சுமைகள் அழுத்தும்
இவனைக் காப்பாற்றுங்கள்!!

கல்வி - இவனை
மட்டுமல்ல - இவனது
சமூகத்தையும் வளப்படுத்த வேண்டும்.

கா. சுஜந்தன்
திருநெல்வேலி கிழக்கு

இக்கவிதை பரிசுக்குரியதாகிறது. இதனை எழுதியவர் தமது முழுமையான முகவரியை எமக்கு அறிவிக்கவும்.


# ஈஸ்வரி மரக்காலை

**பலகை**

**தீராந்தி**

**விறகு**

**விற்பனையாளர்கள்**

**ஈஸ்வரி மரக்காலை**

காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.

கவிதை

# என்னால் எழுதமுடியாத கவிதை

'பூநகரியிலோர்
புயலெழுந்தது...'

இப்படி நான் எழுதுவேன்.
அல்லது,
'கழுத்தை நெரித்தவர்
இதயத்தில் வெடித்தனர்...',
என்றால்
வித்தியாசமாயிருக்குமா
என முயல்வேன்
எனினும்,
என்கவிதை தோற்றுப்போகும்.

போர் நடத்திய
தளபதிகள்
மக்களிடம் சொன்னார்கள்
கவிதை!

பிரெஞ்சுக் கவிஞன்
❀ ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ்
குறிப்பிட்ட 'செயற்கவிதை!'
அதனோடு என் வரிகள்
தோற்றுத்தான் போகும்.

'எதிரிக்கு அன்றுதான்
சமர் தொடங்கிற்று
எங்கள் போராளிகளுக்கு
நான்கு மாதங்களின்
முன்பே தொடங்கிற்று
எங்கள் தலைவனுக்கும்
வேவு படையணிக்கும்
சமர் தொடங்கி
வருடமொன்றாகிறது

எங்கள் மக்களை
கொன்று குவித்து
கடலிலே மிதக்க விட்டவரை
அதனிலும் அதிகமாய்
மிதக்க விட்டோம்

எதிரியிடம் பறித்த
ஆயுதங்கள் சுமந்ததில்
எங்கள் போராளிகள்
தோள்களிலே காயம்!

அடுத்த சந்ததி போரிடவே
ஆயுதம் சுமந்து வந்தோம்
எங்கள் ஆயுதக் களஞ்சியத்தில்
ஆயுதங்கள்
காத்துக்கிடக்கின்றன!,

செயற் கவிஞர்
சிந்திய வரிகள் இவை.

என்னால்
எழுதமுடியாத
கவிதை.

— விவேக்



❀ பிரெஞ்சுக் கவிஞரான ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ் (Blaise Sendrars) ஆபத்தான காரியங்களில் துணிச்சலுடன் ஈடுபடுதலை 'செயற்கவிதை' என்று அழைத்தார். இக்கவிஞர் முதலாம் உலகப் போரில் ஈடுபட்டவர். தீவிரமான விடுதலை விரும்பி.

# தமிழ்மொழியின் வளர்ச்சியில் பிறநாட்டு நிலையிலான பங்களிப்பு

திருமதி. மனோன்மணி சண்முகதாஸ்

மாணவர் உலகம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எவ்வாறு பணியாற்றலாம் என்ற கேள்வியும் இப்பொழுது எழுந்துள்ளது. எமது நாட்டின் தற்போதைய கல்வித் திட்டங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மாணவர் பங்களிப்புச் செய்வதற்கு தடையாகவும் உள்ளன. தமிழைச் சிறப்பு நிலையிலே ஒரு மாணவன் கற்பதற்கும் கட்டாயமாக அவன் ஆங்கில மொழியிலே தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிலைகூட உருவாகியுள்ளது. மரபான கல்விநிலைமாறி நவீன கல்வி முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல பிற நாடுகளில் இந் நிலை இல்லை. எடுத்துக்காட்டாகக் கூறப் போனால் யப்பானிலே யப்பானிய மொழியைச் சிறப்பு நிலையிலே பல்கலைக்கழகத்திலே கற்கின்ற மாணவனுக்கு அவன் கட்டாயமாக ஆங்கில மொழியிலே, சிறப்பு நிலைக் கற்றலுக்கு வரும்போது சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. ஆனால் அந்த மாணவனுக்கு ஆங்கில மொழி அறிவு இருப்பது நல்லது என்ற கருத்து மட்டும் உண்டு. யப்பானிய மாணவர்களின் மொழிப் பற்று பல பிறநாட்டு மாணவர்களை வியப்படையச் செய்யும் ஒரு தனித்துவமான பண்பாகும். ஆங்கில மொழியை ஒரு கற்கைநெறிப் பாடமாக யப்பானிய மாணவர்கள் இடைநிலை பாடசாலையில் கற்கும்போது பயில்கின்றனர். உயர்நிலைப் பாடசாலைக் கல்வி முடியும்வரை ஆங்கிலத்தை ஒரு பாடமாக அவர்கள் கற்றுத் தேர்வு நிலையிலே சித்தியும் பெற்றுப் பின்னர் பல்கலைக்கழகம் செல்வர். அல்லது பணிமனைகளுக்குப் பணிபுரியச் செல்வர். இவ்வாறு தொடர்ந்து ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் ஆங்கில மொழியை ஒரு பாடமாகப் பயின்றாலும் அவர்களுடைய கல்வி மொழி யப்பானிய மொழியாக இருப்பதால் தமது மொழியிலே தேர்ச்சி பெற்றவர்களாகவே விளங்குகின்றனர். பிற மொழியைக் கற்றால் அம்மொழியறிவு தமக்குண்டு என்பதை தேவையற்ற இடங்களிலே அவர்கள் வெளிப்படுத்திக் காட்ட முயற்சிப்பதில்லை. ஆங்கில மொழியைத் தேவையான இடங்களில் மட்டுமே பயன்படுத்துகின்றனர். பிறநாட்டவர்களைக் காணும் போதும் உலகப் பொது மொழியான ஆங்கில மொழியிலேயே பேசவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. இதனால் பிற நாட்டு மாணவர்கள் யப்பானிய மாணவர்களின் ஆங்கில அறிவைப் பற்றித் தாழ்த்திப் பேசுவதும் வழக்கமாக உள்ளது. ஆனால் உண்மையான நிலை யப்பானியரது தாய்மொழிப் பற்றின் தரத்தை உணர்ந்து கொள்ளும் போது தான் பிறருக்குத்தெளிவாகும். யப்பானியர் தமது நாட்டிலே யப்பானிய மொழியைவிட்டுப் பிறமொழி ஒன்றிலே மற்றவர்களுடன் தொடர்பு கொண்டால் யப்பானிய மொழிமீது தாம் கொண்டிருக்கும் மதிப்பும் பற்றும் குறைந்து விடுமென எண்ணியே வாழ்கின்றனர். இத்தகைய



# மொழிபெயர்க்கும் கணனி

தனிச் சொற்களையும் குறுகிய சொற்தொடர்களையும் மொழிபெயர்ப்பது கணனியொன்றிற்குச் சுலபமான விடயமாகும். ஆனால் முழு ஆவணங்களையும் மொழி பெயர்ப்பதென்பது அவ்வளவு இலகுவானதல்ல. மொழிபெயர்ப்பென்பது ஒருசொல்லுக்குப் பதிலாக வேறு சொல்லைப் புகுத்துவது அல்ல அநேகமான மொழிகளிற் பல, அர்த்தங் கொண்ட வார்த்தைகள் நிறைந்துள்ளன. அத்துடன் அவை பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தைப் பொறுத்தே அவற்றின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

உதாரணமாக "பயணிகளைக் கொண்டு செல்லும் மின்சாரவண்டிகள் இந்த இடத்துக்கு அப்பால் செல்லலாகாது" (Noelectric Passenger Carrying Vehicles Beyond This Point) என்ற அறிவுறுத்தல் வாக்கியம் ஒரு கணனியை இலகுவாகக் குழப்பமடையச்செய்யும். வண்டி மின்சாரத்தில் இயங்குகின்றதா அல்லது பயணி மின்சாரத்தில் இயங்குகின்றாரா என்று கணனியாற் கூறமுடியாது. அத்துடன் வண்டி, பயணியைக் கொண்டு செல்கின்றதா அல்லது பயணி வண்டியைக் கொண்டு செல்கின்றாரா என்றும் கணனியாற் கூறமுடியாது.

கொச்சையான அல்லது தொழில்நுட்பச் சொற்கள் கணனியின் பணியைக் கடினமாக்குகின்றன. தொழில்நுட்பச் சொற்களை ஆரம்பத்தில் மொழிபெயர்ப்பதற்குக் கையாளப்பட்ட மொழிபெயர்ப்புத் திட்டமொன்று பொறியியலாளர்களைத் திகைப்பில் ஆழ்த்தியது. உதாரணத்திற்குதொழில் நுட்ப விடயங்களை மொழிபெயர்ப்புச் செய்யும் போது நீர் - ஆடு (Water Sheep) என்ற பதம் கணனியில் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில் அங்கு குறிப்பிடவேண்டியது நீரின் விசையால் இயங்கும் பொறிகளையே ஆகும். (Hydraulic Rams) கணனியின் பிழையான மொழிபெயர்ப்புக்குக் காரணம் அது சுயமாகச் சிந்திக்காமல் வழங்கிய தரவுகளுக்கேற்பச் செயற்படுவதேயாகும்.

1954-ம் ஆண்டில் ஐ. பி. எம். (I. B. M.) என்ற நிறுவனம் முதன் முதலாக மொழிபெயர்ப்புத் திட்டமொன்றைத் தயாரித்தது. மொழிபெயர்க்கப்படும் மொழியின் விரிவான அகராதிகளைக் கணனிகள் தமது நினைவில் (Memories – மெமறிஸ் வைத்துள்ளன. அநேகமான நவீன கணனிகள் 100,000 வரையிலான வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களைக் கொண்டுள்ளன. வேறு மொழியிலுள்ள மிகப்பொருத்தமான சொல்லைக்கண்டுபிடிக்க கணனிகள் அந்த அகராதிகளைப் பயன்படுத்துகின்றன. ஆயினும் ஒரு மொழிபெயர்ப்பாளராற் கணனி

ஒரு மொழிப்பற்று எல்லா நாட்டவர்க்கும் இருக்க வேண்டிய ஒருசிறப்பான பண்பாகும். யப்பானியரது மொழிப்பற்று எம்போன்ற மொழிமீது பற்றுக் குறைந்த நாட்டு மக்களுக்கு ஒரு பயில்நெறியாக அமையின் நன்று. எனவே குறிப்பாக மாணவநிலையிலே யப்பானியருடைய மொழி பற்றிய எண்ணங்களை எமது மாணவர்களும் அறிந்துகொண்டால் நல்லது. உலகிலே இன்று பொருள்வளமும் பலமும் பெற்றுள்ள யப்பான் நாட்டில் யப்பானிய மொழி மட்டுமே கல்வி மொழியாக இருக்கின்றது. பல்கலைக் கழகங்களிலே சில கற்கைநெறிகள் பிற மொழிகளிலே நடைபெற்றாலும் கட்டாயக் கல்வி பெறவேண்டிய நிலையிலுள்ள மாணவர்களின் பயில்நெறிகள் யாவும் யப்பானிய மொழியிலேயே நடைபெறுகின்றன. இவ்வாறு ஒரு மொழி மூலமாக இருப்பது கல்வித் திட்டங்களை வகுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் வசதியாக உள்ளது. நமது நாட்டிலும் ஒரு மொழியிலேயே மாணவர்கள் 16 வயது வரை கல்வி பயிலக்கூடிய நிலை இருக்கின்றது. ஆனால் அம்மொழியின் வளம் குன்றிச் செல்கிறது. பிற உலக மொழிகள் சிலவற்றைப் போல தனித்தியங்கும் ஆற்றல் தமிழ் மொழிக்குஇல்லை என்றமதிப்பீடும் எம்மவரால் இப்போது கூறப்படுகின்றது. இந்நிலைக்குத் தமிழ்மொழிவந்தபின்பு அதன் அழிநிலைவேகமாகத் திட்டமிடப்படுவதையும் எம்மால் உணர முடிகின்றது. தமிழ்மொழியின் அந்நிலையைஎமது மாணவர்பணியால்தடுக்கமுடியும். இதற்கும்எமதுமாணவர்கள் யப்பானியமாணவர்களைப்போல மொழிப்பற்றும்பயிற்சியும் உடையவர்களாக மாறவேண்டும்.

**யப்பானிய மாணவர் வாழ்க்கைநெறி**

யாப்பானிய பாடசாலைகள் மாணவர் வயது நிலைக்கேற்ப நான்கு பெரும் பிரிவுகளை உடையன. 1) கீழ் நிலைப் பாடசாலைகள் 2) ஆரம்ப நிலைப் பாடசாலைகள் 3) இடைநிலைப் பாடசாலைகள் 4) உயர் நிலைப் பாடசாலைகள் என அவை பெயரிடப் பட்டுள்ளன. தேசிய பாடசாலைகள் தனியார் பாடசாலைகள் என்ற பாகுபாடு இவற்றில் இல்லை. எல்லாப் பாடசாலைகளுமே தேசிய பாடசாலைகளாக இயங்குகின்றன. இவற்றைவிட இப்பாடசாலைகளிலே பயில்கின்ற மாணவர்கள் தமது பாடநெறிகளிலே பயிற்சி பெறுவதற்கென தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளன. யப்பானிலே உள்ள தேசிய பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் உள்ள வேறுபாடு குறிப்பிடத்தக்கதொன்றாகும். தேசிய பாடசாலைகள் யாவுமே அரசாங்கத்தால் கல்வி அமைச்சு மூலம் நடத்தப்படுகின்ற பாடசாலைகளாகும். தனியார் பாடசாலைகள் யாவும் தனியாரால் தேசிய பாடசாலையில் பயில்கின்ற மாணவர்க்கென உதவிப் பயிற்சிப் பாடசாலைகளாக நடத்தப்படும் பாடசாலைகளாகும். இந்த உதவிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் கற்பிக்க முடியாது என்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களாவர். அதேபோன்று தேசியபாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களில் எவருமே தாம் கற்பிக்கும் வகுப்பு மாணவர்களுக்குத் தனியார்பாடசாலைகளில் சென்று கற்பிக்க முடியாது என்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களாவர். இத்தகையதொரு கட்டுப்பாடு இரு நிலைப்பட்ட ஆசிரியர்களுக்கும் இருப்பதால் மாணவர் மத்தியில் ஆசிரியர்களின் கற்பித்தல் தரம் பற்றிய மதிப்பீடும், கணிப்பீடும் தோன்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படுவதில்லை.



மொழிபெயர்த்த விடயத்தைச் சரிபார்க்கவேண்டியுள்ளது. எனினும் இத்துறையில் 1988-ம் ஆண்டளவில் 96 சதவீதம் சரியான செயற்பாட்டு முறைகள் விருத்தி செய்யப்பட்டன. கணனிகளால் விரைவாக மொழிபெயர்க்கக்கூடியதாகவுள்ளது. ஐரோப்பிய மொழியொன்றிலிருந்து இன்னொன்றிற்கு 1000 வார்த்தைகளை மொழிபெயர்க்க ஒரு மனிதனுக்கு அரைநாள் வரை தேவையாகின்றது. அடிப்படை அம்சங்களைக் கொண்ட மொழிபெயர்ப்பை 20 நிமிடங்களில் கணனியொன்றினால் வெளியிடமுடியும்.

உலகத்தில் இயந்திரமூலமான மிகவுஞ்சிறந்த மொழிபெயர்ப்புமுறை யூரோற்றா (Eurotra) ஆகும். ஆங்கில, பிரான்சிய, சுவீடிய, ஜேர்மனிய மற்றும் ஸ்பானிய மொழிகளாகிய ஐந்து மொழிகளில் தொலைபேசிமூலம் தன்னியக்க மொழிபெயர்ப்பைப் பெறுவதற்கான முறையொன்றைப் பிரித்தானிய தொலைபேசித் தொடர்பு நிறுவனம் தயாரித்துவருகின்றது. தொலைபேசிமூலம் வேற்றுமொழியில் வேண்டுகோள் விடுப்பவர் கூறும்விடயத்தையும், கணனி மொழிபெயர்ப்புச் செய்கிறது. தற்போது இந்தமுறையானது ஒப்பீட்டளவில் வேகம் குறைந்ததாகவே உள்ளது.

## ஜூலை 26 புரட்சிவாத இயக்கம்

பிடல் கஸ்ரோவினால் வழிநடத்தப்பட்டபுரட்சிவாத இயக்கம் இதுவாகும். இவ்வியக்கந்தான் 1959-ல் கியூபாவில் வுல்கென்சியோ பற்றிஸ்ராவின் (Fulgencio Batista) ஆட்சிக்கவிழ்ப்பிற்குக் காரணமாயிற்று. சன்டியாக் கோவிலுள்ள இராணுவ விடுதிகளின் மீது ஜூலை 26-ல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக இப்பெயர் ஏற்பட்டது. படையை அமைப்பதற்குக் கஸ்ரோ 1955-ம் ஆண்டில் மெக்ஸிக்கோவிற்குச் சென்றிருந்த சமயம், இந்த இயக்கம் அதிகார பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. கியூபாவில் எஞ்சியிருந்த தலைவர்களான பிராங் பெயிஸ் (Frank Pais) ஆர்மண்டோ ஹாட் (Armando Hart) மற்றும் என்றிக் ஒட்டுஸ்கி (Enrique Ottuski) ஆகியோர் நாசவேலை மற்றும் அரசியல் நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு இந்த இயக்கம் அமைக்கப்பட்டது. விவசாயிகளுக்குக் காணி வழங்குதல் பொதுச் சேவையை நாட்டுடமையாக்குதல், தொழில் மயமாக்கல், எல்லோருக்கும் கல்வி வழங்குதல் ஆகிய புரட்சிகரத்திட்டங்களை இந்த இயக்கம் அப்போது பின்பற்றி வந்தது.

# கார்ல்மாக்ஸ்(KARL MARX)

இவர் ஓர் அரசியற் சிந்தனையாளரும் சமூக வியலாளரும் பொருளியலாளருமாவார். இவரது சிந்தனைகளின் அடிப்படையில் மலர்ந்ததுதான் 'மாக்சிசம்' எனப்படும் பொதுவுடமைக் கொள்கையாகும்.

இவர் ஜேர்மனியில் றைன் மாகாணத்திலுள்ள றையெட் (Triet) எனுமிடத்தில் ஓர் யூத குடும்பத்தில் 1818-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி பிறந்தார். பொன் (Bonn) மற்றும் பேர்லின் (Berlin) ஆகிய பல்கலைக்கழகங்களிற் கல்வி பயின்று பட்டம் பெற்றார்.



இவரது பரந்த அரசியற் சிந்தனைப் போக்கு இவரைப் பத்திரிகைத்துறையில் ஈடுபாடு கொள்ளச் செய்தது. 1842-ம் ஆண்டில் கொலோன் நகரிலிருந்து வெளிவரும் 'றெயினிச்சி செய்துங்' (Rheinische Zeitung) என்னும் பத்திரிகையின் ஆசிரியரானார். 1844-ல் 'தி எக்கனோமிக் அண்ட் பிலோசொபிக்கல் மனுஸ்கிறிப்ற்' (The Economic And Philosophical Manuscript பொருளாதார மற்றும் தத்துவம்பற்றிய கையேடுகள்) என்ற நூலை எழுதி வெளியிட்டார். இதில் தனிமனிதச் சுதந்திரத்தைப்பற்றியும் அவனுடைய மதிப்பைப் பாதிக்கும் சக்திகளைப்பற்றியும் விளக்கியுள்ளார். இவரது பத்திரிகைக்குத் தடைவிதித்தபின் இவர் ஜேர்மனியை விட்டுப் பாரிஸ்நகருக்குச் சென்றார். அப்பொழுது அங்கே வாழ்ந்த பிரஞ்சு சோசலிஸ எழுத்தாளர்களுடன் அறிமுகமானார். பிறெட்றிக் எங்கல்ஸ் (Friedrich Engels) என்பவருடன் இவர் ஏற்படுத்திக் கொண்ட நட்பு இவரது வாழ்நாள் முழுவதும் நீடித்தது.

1845-ல் பாரிஸிலிருந்து பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிறசல்ஸிற்குச் (Brussels) சென்றபொழுது எங்கல்சும் அங்குசென்றார். பிறசல்ஸிலிருக்கும் அவருக்குப் புகழ்தேடித்தந்த நூல்களில் ஒன்றான 'கொம்யூனிஸ்ற் மனிபெஸ்ரோ' (The Communist Manifesto) என்ற நூலை எங்கல்ஸின் பங்களிப்புடன் வெளியிட்டார். இதில் அவரது சோசலிஸ தத்துவம்பற்றி முழுமையாக விரிவக்கப்பட்டுள்ளது.

1848 ல் இவர் இங்கிருக்கையில், ஜேர்மனியில், புரட்சிச் சிந்தனைகள் வேர் ஊன்றத் தொடங்கியது. கார்ல் மாக்ஸ் மீண்டும் கோலோன் சென்று தனது பத்திரிகையை மீளப் பிரசுரிக்க ஆரம்பித்தார். ஆனால் 1849-ல் இவர் ஜேர்மனியிலிருந்து திரும்பவும் நாடுகடத்தப்பட்ட நிலையில் லண்டன் நகர் சென்று தனது வாழ்நாளில் மிகுதி நாட்களை அங்கு கழிக்கலானார். 1867 ல் 'டாஸ் கப்பிற்றல்' (Das Kapital) (மூலதனம்)என்ற நூலை வெளியிட்டார். இதில் முதலாளித்துவம் பற்றிய தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் சமூகத்தின் பொதுவுடமையாக இருக்கவேண்டும் என்ற சிந்தனைப்போக்கினை உடையவர். மக்களின் அரசியலும் சமூக அமைப்பும் அவர்களுடைய பொருளாதார வாழ்க்கையைப் பொறுத்திருக்கின்றன. எனவே, ஒரு நாட்டின் அரசியலை அறிந்துகொள்ள மக்களின் பொருளாதார வாழ்க்கையை ஆராய வேண்டும். பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப மக்களிடையே வகுப்பு வேற்றுமை உண்டாகிறது. பின்னர், இவ்வகுப்பினருள் ஒரு பிரிவினர் மற்றவர்மீது ஆதிக்கம் செலுத்த முயல்கின்றனர். நாளடைவில் தொழிலாளர்களுக்கு ஆதரவான சூழ்நிலை ஏற்பட்டதும் அவர்களுடைய அதிகாரம் மேலோங்கி முதலாளித்துவம் ஒழிக்கப்படும். பின்பு சோசலிஸ சமுதாயம் அமையும். இதுவே மாக்ஸின் கொள்கையாகும். இக்கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்தார். இவரது சீடர்களில் ஒருவர்தான் சோவியத் ஒன்றியத்தின் தந்தை என அழைக்கப்படும் லெனின். இவரது கொள்கை ரஷ்யா, சீனா மற்றும் கொம்யூனிஸ நாடுகளிற் பின்பற்றப்படுகிறது. 1883ம் ஆண்டு மார்ச் 14-ம் திகதியன்று லண்டனிற் காலமானார்.

## வாழ்க்கை என்பது ஓர் போர்க்களமே

வாழ்க்கைஎன்பது ஓர்போர்க்களமே. இதை நீ முதலில் உணரவேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கைப் போர்க்களத்தில் நிற்கும் வீரர்களே. போர்முனையில் நிற்பவன் தன் இலட்சியத்தை அடையவேண்டுமானால் போராடித்தான் தீரவேண்டும். இது மாற்றமுடியாத ஒரு நியதி.

வாழ்க்கையில் ஓர் உயர்ந்தநிலையை அடைவதற்குநமது வாழ்க்கைகுறித்து ஒருதெளிவான குறிக்கோள் - அல்லது இலட்சியம் அமையவேண்டியது மிகவும்முக்கியமாகும். நம்மைப்பற்றி நாமே தீர்க்கமாகப் புரிந்து கொள்கின்றோம். வாழ்க்கையில் முன்னேறுவதற்கான அடிப்படைத்தகுதி இதுதான் என்பதை மறுப்பதற்கில்லை. வாழ்க்கைப் பயணத்திற்கும் இது முற்றிலும் பொருத்தமாக இருக்கும். வாழ்க்கைப்பாதையில் எந்த நோக்கத்துடன் நடைபோடுகிறோம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் திட்டவட்டமாகத் தெரிந்திருக்க வேண்டும். கால்போன போக்கில் போகக்கூடாது. உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பது குறித்து ஒரு திடமான முடிவினை மேற்கொள்ள வேண்டும்,

உன்பாதை கரடு முரடானதாக இருக்கலாம். கல்லும், முள்ளும் எங்கும் பரவிக்கிடக்கலாம். பயங்கர ஜீவராசிகள் பாதையில் ஊர்ந்து கொண்டிருக்கலாம். உன் காலிலே செருப்பு இல்லை, என்பதெல்லாம் உண்மையாக இருந்தாலும் நடப்பதை நிறுத்தாதே. இலட்சியப் பாதையில் கால்களில் வந்து மோதும் வேதனைகளைப்பற்றி சற்றும் சிந்தனை செய்யாதே. கூடியவிரைவில் கால்களை நல்ல இடத்தில் ஊன்றிநடக்க முயற்சிசெய். சாத்தியப்படவில்லை என்றால் முள்ளோ, கல்லோ எந்த இடமாயினும் கால் வைக்கக் கவலைப்படாதே.

சிந்தனைத் தொகுப்பு

# அரும்புகள்

### மாணவர் ஆக்கங்கள்

## உறவுகள்

அன்னையின் மடியில் கண் மலர்ந்த போது
அசைந்து வந்தது தாய் என்ற உறவு
அன்னை அவள் சுட்டிக்காட்ட
ஆடி வந்தது தந்தை என்ற புது உறவு.

வாழ்க்கை என்ற சோலையிலே
வாழ்ந்து வந்த வேளையிலே
வாழ வைக்க வந்தது ஓர்
குடும்பம் என்ற பெரும் உறவு.

சிற்றறிவை சீர்படுத்த
சிந்தனையை திணித்து வைக்க
கல்லூரி புகுந்த போதும்
எத்தனையோ உறவுகள்...

வாழ்க்கை என்ற சக்கரத்தில்
ஓடிவரும் உறவெல்லாம்
மரணம் என்ற கூடுவர
மாண்டுதான் போவதென்ன.

க. சுபாஸ்கரன்
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

✶ — ★

## நடைப்பிணமாகலாமா?

புத்தகப் புதைகுழியில் புதைந்து நாம்
வாழுகிறோம்
உலகறியாத் தவளைகளாய்
கிணற்றுக்குள் மாழுகிறோம்
ஏட்டுப்படிப்புடன் நாம் வீட்டுப் பூனைகளாய்
வாழ்ந்து விடில் வையகத்திற் கென்னபயன்
எம்மால் உண்டு.
சிந்திக்கத் தெரிந்தவர் நாம்
நடைப்பிணமாகலாமா?
பரந்த இந்த வையகத்தில்
ஊமைகளாய் வாழ்ந்து விடில்
மானிடப் பிறவிக்கு மகத்துவம் உண்டோடா?

த. தயாபரன்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
ஆண்டு 11 மாணவன்

## விரைவோம்...

கார் முகில் விலக - அங்கு
கதிரவன் சிரித்துவர
பட்டமரங்கள் மீண்டும்
பசுமை தர
ஊர் மகிழ நல்ல
உழவர் கொடை பெருக
மாவீரர் சமாதிகளில்
மல்லிகை மணம் வீச - அங்கு
தீங்குயில் இசைபாட
அடும் மயில் அகவ
வீரவணக்கங்களுடன் - எம்
வீட்டு மதில்கள் நிமிர
சரித்திரம் படைத்து - வீர
சாவு பெற்ற செல்வங்களின்
சின்னங்களாக சாலைகள் மிளிர
தமிழீழத் தேசமெங்கும்
சுதந்திரத் தென்றல் வீச
பொங்கு கடல் பொலிவுற்று
பசுந்தமிழில் கவி பொழிய
கானகங்கள் கவின் பெற்று
வானகம் பொழிய
வீடுகளில் விலங்கிருள் அகல
விடுதலைத் தீபம் எரிய
மானமுள்ள எம்தலைவனின் தலைதனை
மலர்மாலைகள் தழுவ
வீறு கொண்டெழுந்த
வேங்கைகள் கொடி
விண்ணிலே அசைய
எண்ணிலாத்துயர் அடைந்த
எம் மக்கள் மனங்கள்
மகிழ்ந்து சிரிக்க
வானவர் வாழ்த்த
வையகம் போற்ற
விடிவுவரும் விரைவில்.

சி. ஜெயசாந்தி
யா/வேம்படி மகளிர் கல்லூரி

✶ — ★

## எங்கே ஓடுகிறீர்?

வளமான தமிழீழம்
விரைவாக அமைப்பதற்காய்
இம் மண்ணில்
உரமாகி
உருக்குலையும்
மானத்தமிழர் தனை விட்டு
எங்கே ஓடுகிறீர்?
தாயை விட்டு
அவள் தன் நாட்டை விற்று
பணம் தேடி
சுகம் கண்டால்
உன் சந்ததியின்
வருங்காலம்??......

ஆதவன்
சில்லாலை

க. நாகேந்திரன்
ஆநாறி மரத்தடி
கொக்குவில்

# இன்றைய யாழ்நகர்

கிருஷ்ணவேணி மனோகரன்,
ஆரம்ப உயர்தரம் (கணிதம்)
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

இரவு 8. 30 மணியளவில் வீடுகளில் மண்ணெண்ணெய் விளக்குகள் மற்றும் தேங்காய் எண்ணெய் விளக்குகள் கண் சிமிட்டியவாறு ''இதோ இப்பொழுதே அணைந்து விடுகின்றோம் பார்' என்று கூறுவதுபோன்று எரிந்தவாறிருக்கின்றன. ''பிள்ளை நேரத்துக்கு விளக்கை அணைத்துப் போட்டுப் படு'' என்ற அதட்டலான குரல் எழுந்ததும் விளக்குகள் அணைகின்றன. ஒன்பது மணிக்கே அவர்களுக்கு நடு நிசியாகிவிடும். மண் குடிசைகளிலும் கூடாரங்களிலும் உள்ளவர்கள் பசியால் நித்திரைவராது பௌர்ணமி நிலவையே விளக்காகக் கொண்டு ஏக்கத்துடன் அடுத்தநாள் சாப்பாட்டிற்கான வழி பற்றி யோசித்துக் கொண்டிருந்தனர். சில குடிசைகளில் அப்பொழுதுதான் ஈர விறகுகள் புகைத்துக் கொண்டிருந்தன.

என்ன திகைக்கிறீர்கள்; 20 ம் நூற்றாண்டின் ஆரம்பத்துக்குச் சென்று விட்டோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? இல்லை, இவைதான் இன்றைய யாழ்நகரில் தினந்தோறும் நிதர்சனமாகும் காட்சிகள்.

இங்கிலாந்தில் ஐம்பது வயதிலும் ஆடிப்பாடித் திரிகையில் எங்கள் 10 வயது பாலகர்கள் போர்க்களத்திலே தம் உயிரை மண்ணுக்காக அர்ப்பணிக்கின்றனர்.

உயர்ந்திருந்த எங்கள் கட்டிடங்கள் இன்று பொம்பர் குண்டு வீச்சுக்களால் தாய் மண்ணை ஆவலுடன் விழுந்து வணங்குகின்றன. எங்கள் கட்டடங்களின் மண்பாசம் தான் எவ்வளவு உயர்ந்து விட்டது. மக்களிற்கு பிரதானமாக இருந்த எங்கள் பிரதான வீதி இன்று அந்நியரின் பசிக்கு இரையாகித் துவண்டு போய்க் கிடக்கின்றது. சொந்த இடத்தை விட்டு துரத்தப்பட்ட மக்களிற்கு அடைக்கலம் கொடுக்கும் புனிதப்பணியை இந்த நேரத்திலும் யாழ்நகரின் இடிந்த கட்டடங்கள் செய்து கொண்டுதான் இருக்கின்றன.

பள்ளிக்குச் சென்று பாடித்திரியவேண்டிய எங்கள் சிறார்கள் இன்று வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்ற நிலை தினந்தோறும் எங்கள் கண்களில் படுகின்றன. காலை ஆறு மணிக்கு எழுந்து பாடம் படித்த மாணவர்கள் இன்று காலை ஐந்து மணிக்கே எழுந்து விடுகிறார்கள். படிப்பிற்காக அல்ல. பாணிற்கும், அரிசிக்கும் வரிசையில் நிற்பதற்காக. இது மட்டுமா எங்கள் யாழ் நகரில் எத்தனை முனிவர்கள் தவமிருக்கிறார்கள் ஏன் தெரியுமா? குமணனின் வரும் மண்ணெண்ணெய்க்கும், சீனிக்கும்.

சொந்த இடத்தைவிட்டு வெளியேறி இடிந்த கட்டடங்களிலும், ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அடைக்கலம் புகுந்து அல்லற்படும் அவலம் எங்கள் யாழ் நகரில் சாதாரணமாகிவிட்டது.

இந்த மக்கள் படும் இன்னல்களும், அவமானங்களும் அவர்களுக்கே சொந்தமாக எழுதப் பட்டு விட்டன போலும்.

கட்டுக்கட்டாக கொப்பிகள் வாங்கி கப்பல் விட்ட எங்கள் மாணவர்கள் 20 ஒற்றைக் கொப்பிக்கு என கடைகளில் மன்றாடும் காட்சிகளும் பழைய கொப்பி ஒற்றைகளைக் கிழித்து அச்சகத்தை நோக்கி படையெடுக்கும் காட்சிகளும் தாங்க முடியாமலிருக்கிறது.

இன்று எம் யாழ் வாசிகளுக்கு இணையாகச் சிக்கனத்தில் போட்டி போடுவதற்கு ஒருவரும் இல்லை எனும் அளவிற்கு எம்மக்கள் மாறிவிட்டார்கள். பனங்கழிக்கும், பனாட்டுக்கும் விறகுத் தூச்சிகளிலும் கூடத்தான் இன்று எவ்வளவு சிக்கனம்.

எங்களுடைய யாழ் நகரத்து வாழ்க்கையில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. உள்ளூர் உற்பத்தியில் கவனம் செலுத்தும் ஆர்வமும் ஓர் முக்கியமானதாகும். உள்ளூர் உற்பத்திகளை உதாசீனம் செய்து வந்த யாழ் பிரதேசம் இன்று அவற்றில் முனைந்து ஈடுபட்டுள்ளது. சுதேச பொருளாதாரத்தை வளர்த்து பொருளாதாரத்தை தளம்பலற்றதாக மாற்றிக்கொண்டுவரும் ஒரு இயல்பைக் கொண்டதாக திகழ்கிறது.

இது மட்டுமன்றி முன்னர் ஒரு மணித்தியால மின்சாரத்தடை ஏற்பட்டாலே பெரிது படுத்தும் மக்கள் இன்று மின்சாரமே அவசியம் அற்ற ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டுள்ளனர். மக்களிடையே சகிப்புத் தன்மை உருவாகியுள்ளதையும் காணக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் எம் பிரதேசத்து மக்களின் கலாச்சாரத்தில் பாதிப்பு ஏற்படுத்திக் கொண்டு இருந்த இந்திய மற்றும் ஆங்கில தேசத்துப்படங்கள் மக்களின் வாழ்க்கையில் வகித்த பெரும்பங்கை இழந்துள்ளன. இதன் மூலம் யாழ் நகரானது பெரும் செலவுகளைக் குறைத்ததுடன் மாத்திரமன்றி தமிழ் மக்களின் பாரம்பரிய கலாச்சாரத்தை நிலைநிறுத்தும் நிலையை அடைந்துள்ளது. முன்னர் தமிழ் இலக்கியக் கூட்டம், நாவல்கள், நாடகங்களில் மக்கள் ஆர்வம் கொண்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

மற்றும் எம் தேசிய உணர்வை மழுங்கடித்த படங்கள், பாடல்களை மக்கள் விரும்பிய நிலை மாறி புரட்சிப் பாடல்களை விரும்பிக் கேட்பதைக் காணக்கூடியதாக உள்ளது மற்றும் எம்மக்களுக்கு தேச உணர்வானது பெருமளவு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

யாழ் நகரானது தற்போதைய நிலமைக்கு ஏற்ப தன்னை மாற்றியமைத்துள்ளது. வீடுகளிலே இரவு நேரங்களில் மக்கள் சைக்கிளைச் சுற்றிப் பாடல்களைக் கேட்டல், மண்ணெண்ணையில் வாகனம் ஓடுதல் என்பவற்றை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மாட்டு வண்டியைக் கேலி செய்தவர்கள் இன்று மாட்டு வண்டியைத் தமது போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் மக்கள் படும் துன்பங்களும் சொல்லிலடங்க முடியாதவையாக இருக்கின்றன. முன்னர் நல்ல தொழிலில் ஈடுபட்டவர்கள் இன்று சைக்கிள் வியாபாரிகளாக மாறி வவுனியா சென்று பொருட்கள் கொண்டு வருவதையும் கடலில் தொழில் செய்தவர்கள் தமக்குரிய கடலிலேயே மீன் பிடிக்க

(...21-ஆம் பக்கம் பார்க்க)

# எரிமலையைச் சுற்றி 36 கோடி மக்கள்

உலகில் எவ்வளவோ எரி மலைகள் உள்ளன. இவற்றை அனல் கக்கும் எரி மலைகள், அடங்கிக் கிடக்கும் எரிமலைகள், அவிந்து போன எரி மலைகள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

ஆனால் இதற்கு விஞ்ஞான அடிப்படை எதுவும் இல்லை என்று ஒரு நிபுணர் கூறுகிறார். அந்த நிபுணர் பெயர் திரு. றொபெட் டில்லிங்.

எரிமலை ஒன்று பல நூறு அல்லது பல ஆயிரம் ஆண்டுகள் அடங்கிக் கிடந்து பிறகு திடீரென என்றாவது ஒரு நாள் நெருப்பைக் கக்க ஆரம்பிக்கலாம்.

அவிந்துபோனதாகக் கருதப்படுகின்ற எரி மலைகளால்தான் கடந்த காலத்தில் மிக விபரீதமான நாசம் ஏற்பட்டுள்ளது.

அவிந்து போனதாகக் கருதப்பட்ட வெசுவியஸ் எரிமலை கி. பி. 79 ஆம் ஆண்டில் பயங்கரமாக நெருப்பைக் கக்கியது.

ஓர் எரிமலை எத்தனை காலம் செயலற்று இருக்கிறதோ அந்த அளவுக்குப் பின்னர் மிகப் பயங்கரமாக வெடிக்கும் வாய்ப்பு உண்டு. அப்படிப் பட்ட எரிமலையில் இருந்து வெளிப்படுகின்ற நெருப்பும் புகையும் அதனால் ஏற்படும் நாசமும் அதிகளவில் இருக்கும்.

உலகில் பெரும் பாலான எரிமலைகள் உள்ள பசுபிக் அல்லது அவற்றை சுற்றியுள்ள ஆபத்தான பிராந்தியங்களில் சுமார் 36 கோடி மக்கள் வசிக்கின்றார்கள்.

இந்த எரிமலைகளில் பெரும் பாலானவை பசுபிக் சமுத்திரத்தைச் சுற்றி அமைந்துள்ள 'நெருப்பு வளையம்' எனப்படுகின்ற பிராந்தியங்களில் அமைந்த நாடுகளில் உள்ளன.

ச. ஸ்ரீபிரியா
யா / இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

---

இன்றைய யாழ்நகர் .. (20ஆம் பக்கத்தொடர்)

முடியாமல் உயிரிழப்பதையும் வேறு தொழில்களில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு ஏற்படுகின்ற பலஇன்னல்களை யாழ் நகரவாசிகள் சகித்து வாழ்கின்றனர். இவர்கள் இன்ப துன்பம் அற்ற மக்களாகி விட்டனர். ஆனாலும் யாழ்நகரச் சமுதாயம் கல்விச் சமுதாயமே. இக் கல்விமேம்பாட்டை யாழ் கல்வி மேம்பாட்டுக்கழகங்களும் மற்றும் பல அறிஞர்களும் கவனித்து அதனை வீழ்ச்சி அடையாமல் பாதுகாத்து வருகின்றனர். எமக்கு எத்துன்பம் வந்த போதும் தளராத துணிவோடு போராடி எமது உரிமைகளை வெல்வோம். கட்டடங்களை சிதைக்கலாம். பொருளாதாரத் தடையை விதிக்கலாம். மனித உரிமையை மீறலாம் ஆனால் மனவுறுதியை எவராலும் சிதைக்க முடியாது.

---

## ஆயுதக் குறைப்பு (DISARMAMENT)

சர்வதேசரீதியாக இச்சொல் பின்வரும் நான்கு அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

1. யுத்தமொன்றில் தோல்வியடைந்த நாடொன்றின் ஆயுதங்களை அந் நாட்டிற்கு விதிக்கும் ஒரு தண்டனையாகக்கருதி அழித்துவிடுதல் அல்லது குறைத்துவிடுதல் (1919இல் செய்யப்பட்ட வேர்சல்ஸ் உடன்பாட்டின் (Versaillies Treaty) பிரகாரம் ஜேர்மனியினதும் அதன் கூட்டு நாடுகளினதும் ஆயுதங்கள் குறைக்கப்பட்டன.

2. ஒரு குறிப்பிட்ட பூகோளப்பரப்பை அடிப்படையாகக்கொண்டு இருதரப்பினர் சேர்ந்து செய்து கொள்ளும். ஒப்பந்தத்தின் பிரகாரம் செய்யப்படும் ஆயுதக்குறைப்பு. [அமெரிக்காவிலுள்ள ஐந்து பெரும் ஏரிகளின் (Great Lakes) பரப்பினை ஆயுதங்களற்ற பிரதேசமாக வைத்திருப்பதற்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் 1817 வரையில் இப்படியொரு ஒப்பந்தத்தினைச் செய்திருந்தன,]

3. ஆயுதங்களையே அடியோடு அழித்துவிடவேண்டுமென்ற கற்பனைக்கோட்பாடு.

4. ஐ. நா. சபைபோன்ற ஓர் அமைப்பின் வழியே நடைபெறும் கலந்துரையாடல் மூலம் சகல நாடுகளும் தத்தம் ஆயுதங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல்.

இறுதியில் கூறப்பட்டிருப்பதே இங்கு வேண்டப்படுவதாகும். அணுவாயுதங்களின் பெருக்கம் அதிகரித்துவருவதால் பாரியளவிலான மக்களழிவு தடுத்துநிறுத்தப்படவேண்டியுள்ளது. முதன் முதலில் 1945 - ம் ஆண்டு அணுகுண்டு பயன்படுத்தப்பட்டுவிட்டது. இனிமேலும் பயன்படுத்தப் படுமாயின் மனித நாகரிகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் ஆபத்துள்ளது.

ஆயுதக்குறைப்புக்கான முயற்சிகள் இரண்டாம் உலகப்போரின் பின்னரிருந்தே நடைபெற்று வருகின்றன. ஐ. நா. சபை மட்டத்தில் ஆராயப்பட்டுவருகின்றன. 1970 களில் ஆரம்பித்து நடத்தப்பட்டுவரும் சோல்ற் (SALT) இதற்கொரு உதாரணமாகும்.




# மூக்குக்கண்ணாடியில் ரி. வி. (T. V)

ஜப்பானிய ஸொனி (Sony) நிறுவனம் புதுமையான ரி. வி. (T. V.) ஒன்றை உருவாக்கியுள்ளது. மூக்குக் கண்ணாடியில் அதனைப் பொருத்திக் கொள்ளலாம். அத்தனை சிறியது.

இந்த ரி. வி. யின் நிறை 250 கிராம். ரி. வி. யுடன் ஒரு வளையம் பொருத்தப்பட்டுள்ளது. அப்படியே தலையில் அதனை மாட்டிக்கொள்ளலாம். ரி. வி. யையும் பார்க்கலாம். அலுப்புத்தட்டினால் கண்ணாடிமூலம் வெளியுலகத்தையும் பார்த்துக் கொள்ளலாம்.

ரி. வி. யில் 1.8 செ. மீ. அளவுள்ள சின்னஞ் சிறிய திரையில் (Liguid Crystal Display) பெரிய திரையிற் காணப்படுவதுபோலவே தெளிவாகக் காட்சி தெரிகிறது. காதுகளிற் பொருத்திக்கொள்ளும் Ear - Phone இல் ஓசையைக் கேட்கலாம். இந்த ரி. வி. யில் முப்பரிமாணப் படங்களைக் கூடப் (3 Dimension Films) பார்க்கமுடியும். இது இன்னும் விற்பனைக்கு வெளிவிடப்படவில்லை. கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுமோ என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ரி. வி. க்கு விஷற்ரோன் (Visortron) என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

# கோள்நிலை இயக்கங்களைக் காட்டும் பொறி (PLANETARIUM)

குடையைக் கவிழ்த்து வைத்தாற்போன்ற அமைப்புக்கொண்ட கூரையின் உட்பகுதியில் வான மண்டலத்தைச் செயற்கையாகத் தோற்றுவிக்கக் கூடிய இயந்திரம் பிளனரேறியம் எனப்படும். இதனுள் ஏராளமான குவிதளவில்லைகளும் (Lenses), அரியங்களும் (Prisms), கண்ணாடிகளும் பொருத்தப்பட்டுள்ளன. வான்வெளியில் கிரகங்களினதும், நட்சத்திரங்களினதும் செயற்பாடுகள்பற்றி இதன்மூலம் அறிந்துகொள்ளலாம். வான் ஆராய்ச்சியாளர்களும், மாணவர்களும் வானவியலைப்பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள இது பயன்படுகின்றது.

ஜேர்மனியிலுள்ள ஜேனாநகரில் வாழ்ந்த வால்தர் பார்ஸ்பெல்ட் (Walther Bauersfied) என்பவர் 1913-ல் முதல் பிளனரேறியத்தை அமைத்தார். வெவ்வேறு விண்கோள்கள் வானவெளியிலே ஒரு வருடத்தில் சுற்றிவருவதை, இரண்டு வினாடி முதல் அரைமணி நேர இடைவெளிக்குள் இக்கருவி காண்பிக்கின்றது.

இன்று உலகின் பெரிய நகரங்கள் அனைத்திலும் வானவியல்பற்றி மக்களது அறிவை வளர்க்க இவ் பிளனரேறியங்கள் பயன்படுகின்றன. உலகிலேயே மிகப்பெரிய பிளனரேறியம் ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் உள்ளது. இக்கட்டடம் 25.15 மீற்றர் விட்டங் கொண்டது. அமெரிக்காவிலுள்ள சான் பிரான்சிஸ்கோவிலுள்ள பிளனரேறியத்தில் 25,000 இயந்திரக்கருவிகளும் பகுதிகளும் உள்ளன. இவற்றின் மொத்த எடை 2.5 மெற்றிக்தொன் ஆகும்.



படவிளக்கம்:- இதுவே முதலாவது நவீன பிளனரேறியம் புறொஜெக்ரர் ஆகும். இதனைக் காள்செய்ஸ் என்ற நிறுவனம் 1923-ம் ஆண்டில் உருவாக்கியது.

# நீரடி ஏவுகணை (TORPEDO) (ரோபிடோ)



நீர்மட்டத்தில் செல்லும் கலங்களையே, நீர்மூழ்கிகளையோ தாக்கி அவற்றை வெடிக்கச்செய்து அழிக்கவல்ல ஏவுகணையே இதுவாகும். கப்பலொன்றிலிருந்தோ, நீர்மூழ்கியொன்றிலிருந்தோ ஏவப்பட்டு உந்திச்செல்லும் ஏவுகணையாகும்.

இது எந்தளவு ஆழத்திற்குச் செல்லவேண்டும், எத்திசையிற் செல்லவேண்டும் என்ற விபரங்களை முன்கூட்டியே ஆயத்தம்செய்து கொள்ளலாம். புதிய நீரடி ஏவுகணையை 1866-ல் முதலிற்செய்தவர் றொபேட் வைற்ஹெட் (Robert Whitehead) என்னும் பிரித்தானிய பொறியியலாளராவார். இதனை உந்தியெறியும் வலு, வழமையில் மின்கலன்களால் வலுவூட்டப்படும் மின்மோட்டார்களினால் வழங்கப்படுகின்றது. ஒலிச்சமிக்ஞைகளைப் பிறப்பிக்கக்கூடிய நீரடிஏவுகணைகள், சோனார் (Sonar) போல கதிர்களைப் பிறப்பித்து அவை இலக்கின் மீது தாக்கித் திரும்புவதனை வைத்துக்கொண்டு அவ்விலக்கைத் தாக்குகின்றன. ஒலிக் கதிர்களைப் பிறப்பிக்காத வகை (Passive Acoustic) நீரடி ஏவுகணைகள் இலக்கிலிருந்து பிறப்பிக்கப்படும் ஒலியைப் பயன்படுத்தி அதனைத் தாக்குகின்றன.

## மின்சுற்று

மின்னோட்டத்தை வழிநடத்தும்பாதை மின்சுற்று எனப்படும். ஒரு மின் சுற்றில் மின்னோட்டத்தை உருவாக்கும் ஏற்றம்பெற்ற துணிக்கைகளுக்குச் சக்தியைக் கொடுக்கும் சாதனம் மின்கலம் அல்லது மின்பிறப்பாக்கி எனப்படும். மின்னைப் பயன்படுத்தும் சாதனங்களாவன விளக்குகள், மின் மோட்டார்கள், இலத்திரனியல் கணனிகள் போன்றவையாகும்.

### மின்சுற்றுக்கள் பலவகைப்படுத்தப்பட்டுள்ளன

1. நேரோட்ட மின்சுற்று.
2. ஆடலோட்ட மின்சுற்று.
3. தொடர்ச்சியான மின்சுற்று.
4. சமாந்தர மின்சுற்று.

ஒரு சமாந்தர மின்சுற்றில் உள்ள ஒவ்வொரு கிளைக்குள் குறுக்காகவுமுள்ள மின்னழுத்தம் அல்லது மின்னழுத்தவேறுபாடு ஒரேமாதிரியானதாகும். ஆனால் மின்னோட்டம் வேறுபடலாம்.

உ-ம் ஒரு வீட்டு மின்சுற்றில் ஒவ்வொரு மின் உபகரணத்திற்கும் குறுக்காக ஒரே மின்னழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. ஆனால் இவை ஒவ்வொன்றின் வலுத்தேவைக்கேற்ப வேறுபட்டளவு மின்னோட்டத்தை எடுக்கின்றது. சமாந்தரமாகத் தொடுக்கப்பட்டால் ஒரேமாதிரியான பலமின்கலன்கள் ஒரு மின்கலத்திலும்பார்க்க அதிகளவு மின்னோட்டத்தை வழங்குகின்றன. ஆனால் மின்னழுத்தம், ஒரு மின்கலத்தினது அழுத்தத்தை ஒத்ததாகவேயிருக்கும்.

மின்பெருக்கிகள், மின்மாற்றிகள், மின்னியல் உறைகலன்களில் இணைக்கும் கம்பிகள் மற்றும் வேறு இலத்திரனியல் ஆக்கக்கூறுகள் ஆகியவற்றைக் கொண்ட வானொலிபோன்ற ஒரு தனிச்சாதனமும் ஒரு மின்சுற்றே. இத்தகைய சிக்கலான மின்சுற்றுக்கள் தொடர் மற்றும் தொடர்சமாந்தர ஒழுங்கமைப்புள்ள ஒன்று அல்லது பல கிளைகளால் ஆக்கப்பட்டிருக்கும்.

## அணு

நம்மைச்சுற்றிலும் எத்தனையோ வகையான பொருட்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் உண்டாகுவதற்குச் சில பொருட்கள் அடிப்படையாக உள்ளன. அவற்றிற்குத் தனிமங்கள் (Element) என்று பெயர். இதற்கு உதாரணமாக இரும்பு, செம்பு, தங்கம், காபன் (கரி) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு தனிமத்தின் மிகச்சிறிய பகுதிக்கு அணு என்று பெயர். அதைச் சாதாரண முறைப்படி பகுக்கமுடியாது. கண்ணாற் பார்க்கமுடியாது. பொருளைப் பெரிதாகக்காட்டும் நுணுக்குக்காட்டி என்னும் கருவியினாற் பார்க்கலாம். ஒரு குண்டூசியின் முனையில்மட்டும் கோடிக்கணக்கான அணுக்கள் இருக்கின்றன என்றால் அணு எவ்வளவு சிறியது என்பதை நாம் அறியலாம்.

அணுக்களால் ஆகிய பொருட்களின் இயல்புகளிலிருந்து அணுக்களைப்பற்றி ஓரளவு ஆராய்ந்து கூறமுடியும். முதலில் ஆராய்ந்துகூறியவர் ஆங்கிலேயதாட்டு விஞ்ஞானி டால்டன் என்பவராவார். இவரைத்தொடர்ந்து மேலும்பல விஞ்ஞானிகள் இதுபற்றி ஆராய்ந்துள்ளார்கள். இவ் அணுக்களின் பகுதிகள் மூன்றுவகைப்படும்.

1. எலெக்ட்ரான் (இலத்திரன்)
2. புரோட்டன் (புலோத்திரன்)
3. நியூட்டன் (நியூத்திரன்)

மேலேகூறப்பட்ட மூன்றினுள் முதல் இரண்டும் மின்சக்தி கொண்டவை. ஆனால் இவற்றுள் புலோத்திரன் நேர்மின்னோட்டம் உடையது இலத்திரன் எதிர்மின்னோட்டம் உடையது. புலோத்திரனின் நிறை மிகக்குறைவு. இலத்திரனின் நிறையானது புலோத்திரனின் நிறையில் 1,840 இல் ஒரு பங்குதான் உண்டு. நியூத்திரன் புரோத்திரனுக்குச் சமமான நிலையில் உள்ளது. ஆனால் அதற்கு மின்சக்தியில்லை யாது.

புரோத்திரனும் நியூத்திரனும் அணுவின் நடுக்கருவில் அமைந்துள்ளன. இவை உட்கருவை மிகவேகமாகச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஒரு தனிமத்தின் அணுவிலுள்ள புரோத்திரன் அல்லது நியூத்திரன்களின் எண்ணிக்கை இன்னொரு தனிமத்தின புரோத்திரன் அல்லது இலத்திரன்களின் எண்ணிக்கையிலிருந்து வேறுபடுவது குறிப்பிடத்தக்கது.

# தெரிந்து கொள்ளுங்கள்!

## வானியல்

1) வானியலில் பின்பற்றப்படும் 'அலகுகள்' (Units) டன்னாட்டு வானவியல் நிறுவனத்தால் 1930 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
2) நியூட்ரோன் விண்மீன் 1.2378 வினாடியில் தன்னைத்தானே சுற்றிக்கொள்கிறது.
3) உலகின் மிகப்பெரிய வானிலை ஆய்வு 'ரேடார்' இந்தோனேசியாவில் நிறுவப்பட்டுள்ளது.
4) கிரேக்கர்கள் கடவுளாக எண்ணி வழிபட்ட விண்மீன் கூட்டம் கிருத்திகை ஆகும்.
5) பிரபஞ்சத்தின் அடர்த்தியை அளவிடப்பயன் படும் அலகு 'ஓமேகா' ஆகும்

## வேதியியல்

1) பிளாட்டினம் என்ற வார்த்தை 'பிளாடா என்ற ஸ்பானிய சொல்லிலிருந்து தோன்றியது
2) 'DDT' என்பதன் விரிவு (Dicholoro Dilhenyp Tricloroethane) என்பதாகும்.
3) ஓசோன் வாயுவை சோன்பீன் (Schnbeah) என்பவர் 1840 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.
4) வீடுகளில் உபயோகப்படுத்தும் 'காஸ் சிலிண்டரில் அடைக்கப்பட்டுள்ள வாயு 'பியூட்டேன்' ஆகும்.
5) உலகிலேயே கனமானதும் விலை உயர்ந்தது மான உலோகம் பிளாட்டினம்.

## ஒளியியல்

1) ஒளியைப் பயன்படுத்தி நோயைக் குணப்படுத்தும் துறை 'ஒளி - உயிரியல்' (Photo Biology) என்பதாகும்
2) ஒளி மின் காந்தக் கொள்கையைக்கண்டு பிடித்தவர் மாக்ஸ்வெல்
3) வானின் கோளவடிவ நீர்த்துளிகளில் சூரிய ஒளி பட்டு நிறப்பிரிகையடைவதையே 'வானவில்' என்றழைக்கிறோம்.
4) நீல்ஸ் பின்சன் (Niels Finsen) தோல் காச நோயை ஒளியைப் பயன்படுத்தி குணப்படுத்தியதற்காக நோபல் பரிசைப் பெற்றார்.
5) ஒளியின் நிறமானது ஒளியின் அலை நீளத்தைப் பொறுத்து அமைகிறது.

## கடலியல்

1) கடலின் ஆழத்தை அளக்க உதவும் கணனியின் பெயர் போத்தோ மீட்டர் (Fathometer) என்பதாகும்.
2) உலகிலேயே ஆழமானதும், பெரியதுமான கடல் பசுபிக்கடல்
3) நீந்தத் தெரியாதவர்கள் கூட மிதக்கக்கூடிய கடல் 'சாக்கடல்' ஆகும். உப்பின் அடர்த்தி மற்ற கடல்களைவிட அதிகமாகவுள்ளதே இதற்குக் காரணமாகும்.
4) ஆழ்கடலில் எழுபது வகையிலான கனிமங்கள் கிடைக்கின்றன.
5) கடல்நீரின் வெப்பத்தை மின்சாரமாக மாற்றியவர் 'கிலாட்' என்பவராவார்.

## உடலியல்

1) 'மயிர்க்கூச்செறிதல்' 'எரெக்ரர் பிலோரம்' (Erector Pilorum) தசை சுருங்குவதால் ஏற்படுகிறது.
2) ஒரு ஆணின் சராசரி உடல் வெப்பநிலை 37 டிகிரி செண்டி கிரேட் இருக்கவேண்டும்.
3) உடல் 'செல்'களிலேயே மிகச்சிறியது விந்தணுவாகும்.
4) சராசரி மனிதனுடைய இதயத்தின் எடை 340 கிறாம் ஆகும்.
5) உடலில் அரிப்பு ஏற்படக்காரணமான சுரப்பி 'ஹிஸ்டமின்' சுரப்பியாகும்.

## மூளை எவ்வாறு செயற்படுகிறது?

உடல் உறுப்புக்களிலேயே தலையாயது மூளை. இது மத்திய அமைப்பின் முக்கியமான பகுதி. மனிதனுடைய நரம்பு மண்டல அமைப்பில் 13 கோடி நரம்புச் செல்கள் உள்ளன. இவற்றுள் 10 கோடி செல்கள் மூளையிலேயே உள்ளன. மனித மூளையின் எடை சுமார் 1.4 கிலோவாகும். பார்வைச் சக்தி, உறக்கம், அசைவுகள், செரிமானம், மூச்சுவிடுதல் ஆகிய தொழில்கள் மூளையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மூளையின் நரம்புச் செல்களுக்கு உணர்வு உறுப்புக்களில் இருந்து செய்திகள் கிடைக்கின்றன. மூளை இந்தச் செய்திகளை ஆராய்ந்து முடிவெடுத்து தசை நார்களுக்கும் மற்றைய உறுப்புக்களுக்கும் ஆணையிடுகிறது.

அறிவுலகம் கேள்வி பதில் அடுத்த இதழில் வெளிவரும்

# ஆங்கிலம் மொழி கற்போம்
# LANGUAGE LEARN ENGLISH

## SCENE - EDUCATION CENTRE
## ENGLISH
## LESSON - THREE

*We trust that you might have learnt with interest, the second lesson in English appeared in our last issue. In the same breath, we are commencing the third lesson. We earnestly welcome your comments regarding our English Lessons please.*

## இடம் - கல்வி நிலையம்
## ஆங்கிலம்
## பாடம் - மூன்று

*எமது சென்ற இதழில் வெளிவந்த இரண்டாவது பாடத்தினை ஆர்வத்துடன் கற்றிருப்பீர்கள் என நம்புகின்றோம். அதேபோன்று மூன்றாவது பாடத்தையும் தொடங்குகின்றோம். "ஆங்கிலம் கற்போம்" தொடர்பாக உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.*

**Lesson Commencing.**

**Balan stands up and starts reading his letter written to Kumaran, as directed by his teacher.**

Tamil Eelam
15 - 2 - 1994

My dear Kumaran

My parents, brothers, sisters and self are keeping fine. Trust members of your family and yourself are keeping fine.

I have received your letter last week. I am very sad after reading what you have written regarding the situation in Colombo. Frightened by the state of conflict in Tamil Eelam, your parents have taken you to Colombo. They admitted you to a school there But you have mentioned in your letter that, you are living without peace and in fear. I learn from newspaper that the police and commandos frequently surround and search Tamil residences. Tamil youth are taken into custody on suspicion and are taken to army camps. It has been confirmed by your letter that, what the papers said is true. At the

வகுப்பு ஆரம்பமாகிறது.

ஆசிரியரின் வேண்டுதலுக்கிணங்க மாணவன் பாலன் தனது நண்பன் குமரனுக்கு எழுதிய கடிதத்தை எழுந்து நின்று வாசிக்கின்றார்.

தமிழீழம்
15-2-1994

என் அன்புள்ள குமரன்

நானும் எனது பெற்றோரும் சகோதரர்களும் நலமாக உள்ளோம். நீரும் உமது குடும்பத்தினரும் நலமாக இருப்பீர்களென நம்புகிறேன்.

உமது கடிதம் கடந்தவாரம் கிடைத்தது. கொழும்பு நிலைமைகள் பற்றி நீர் எழுதியிருந்த வற்றை வாசித்து மிகவும் கவலையடைந்தேன். தமிழீழத்தில் நிலவும் போராட்டச்சூழலுக்குப்பயந்து உமது பெற்றோர் உம்மை கொழும்புக்கு அழைத்துச்சென்றனர். அங்குள்ள பாடசாலையில் உம்மைச் சேர்த்தனர். ஆனாலும் அங்கு நீர் நிம்மதியில்லாமல் பயத்துடன் இருப்பதாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர். அடிக்கடி சிறிலங்கா காவல்துறையினரும் அதிரடிப்படையினரும் தமிழர்கள் வசிக்கும் வீடுகளைச் சுற்றிவளைத்து சோதனையிடுவதாகவும், தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின்பேரில் கைது செய்து முகாமுக்கு அழைத்துச் செல்வதாகவும் நான் பத்திரிகைச் செய்திகளில் அறிவதுண்டு. அவை யாவும் உண்மை என்பதை உமது கடிதத்தின் மூலம் உறுதிசெய்துகொண்டுள்ளேன். அதேநேரம், கொழும்

same time, you have written that you dislike the mechanical way of life in Colombo.

Here in Tamil Eelam, as a result of Sri Lanka government's economic blockade, there is scarcity of things, They are costly. Often, helicopters and bombers carry out attacks.

Even then, we live happily in spite of such difficulties is to achieve our goal - we are proud of this.

Last week, when a bomber attacked our school, one hall was damaged. But we escaped miraculously without any harm. When the plane started circling the school, students and teachers ran outside. We lay face downwards on the ground. Hence. there was no loss of life.

As the ship 'Komari' is taking mails, I am penning this letter in a hurry. I will write to you in my next letter, additional information.

Please convey my affections to your father, mother and sister.

Thank you.

Yours affectionately,
**Balan**

பில் நிலவும் இயந்திர வாழ்க்கைமுறை, உமக்குப் பிடிக்கவில்லை என எழுதியிருந்தீர்.

இங்கு தமிழீழத்தில் சிறீலங்கா அரசின் பொருளாதாரத்தடை நடவடிக்கையினால் பொருட்கள் தட்டுப்பாடு, விலையும் மிக அதிகம். அடிக்கடி உலங்கு வானூர்தியும், குண்டு வீச்சு விமானங்களும் தாக்குதல் நடத்துகின்றன. இருந்தபோதும் நாம் சந்தோசமாகவே வாழ்கிறோம்.

இக்கஷ்டங்களிருந்தும் நாம் சந்தோஷமாக வாழ்வது எங்களுடைய இலட்சியத்தை அடைவதற்கே. இதில் நாங்கள் பெருமை அடைகின்றோம்.

எமது பாடசாலையின் மீது கடந்தவாரம் குண்டுவீச்சு விமானம் தாக்கியதில் ஒரு மண்டபம் சேதமடைந்தது. அனால் எவரும் எவ்வித ஆபத்தும் இன்றி தெய்வாதீனமாக தப்பிவிட்டோம் விமானம் பாடசாலையைச்சுற்றத் தொடங்கியபோதே மாணவர்களும் ஆசிரியர்களுமாக வெளியே ஓடிச்சென்று நிலத்தில் குப்புறப் படுத்துக் கொண்டோம். அதனால் உயிர் ஆபத்து எதுவும் நிகழவில்லை.

இன்று கோமாரிக்கப்பலில் தபால்கள் கொண்டு செல்லவிருப்பதால் அவசரமாக இக்கடிதம் எழுதி அனுப்புகிறேன். மேலும் விபரங்களை அடுத்த கடிததில் எழுதுகிறேன். நன்றி.

உமது வீட்டில் அம்மா, அப்பா, தங்கை, தம்பி அனைவரையும் அன்புடன் விசாரித்ததாகக் கூறவும்.

நன்றி.

உமது அன்புள்ள
பாலன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. Keep | — வைத்திருத்தல் | 17. Search | — தேடல் | 31. Attack | — தாக்குதல் |
| 2. Fine | — நல்ல | 18. Residence | — வசிப்பிடம் | 32. Damage | — சேதம் |
| 3. Trust | — நம்பிக்கை | 19. Youth | — இளைஞர் | 33. Carry | — நடத்துதல் |
| 4. Receive | — பெறுதல் | 20. Custody | — தடுப்புக் காவல் | 34. Problem | — பிரச்சினை |
| 5. Grieve | — கவலை | 21. Suspicion | — ஐயம் | 35 Escape | — தப்புதல் |
| 6. Regarding | — பற்றி | 22. Dislike | — விருப்பமை | 36. Miraculously | — தெய்வாதீனமாக |
| 7. Situation | — சூழ்நிலை | 23. Mechanical | — இயந்திரமயமான | 37. Harm | — தீங்கு |
| 8. Frighten | — பயப்படுத்து | 24. Economic | — பொருளாதார | 38. Circling | — சுற்றி |
| 9. Parents | — பெற்றோர் | 25. Blockade | — தடை | 39. Ground | — தரை |
| 10. Conflict | — முரண்பாடு | 26. Scarcity | — பற்றாக்குறை | 40. Penning | — எழுதுதல் |
| 11. Mention | — குறிப்பிடுதல் | 27. Costly | — விலையுயர்ந்த | 41. Hurry | — அவசரம் |
| 12. Admit | — சேர்த்தல் | 28. Often | — அடிக்கடி | 42. Additional | — மேலதிக |
| 13. Peace | — அமைதி | 29. Helicopter | — உலங்கு வானூர்தி | 43. Information | — செய்தி |
| 14. Newspaper | — பத்திரிகை | 30. Bomber | — குண்டு வீச்சு விமானம் | 44. Convey | — கூறுதல் |
| 15. Police | — காவல்துறை | | | 45. Affections | — அன்பு |
| 16. Surround | — சுற்றி | | | 46. Affectionately | — அன்பார்ந்த |

**"Students we will meet again in the next class."**

**''மாணவர்களே நாங்கள் அடுத்தவகுப்பில் சந்திப்போம்.''**



க. நகனேந்திரன்
மரத்தடி

# ஒரு பாடல் அரங்கேறுகிறது!

கிருஸ்ணகுமாரன்




கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலிருக்கும் நான் அவனைப்பார்த்து - அவன் எங்கே போயிருப்பான்? அவனுக்கு என்ன நடந்தது பெரியகடை வீதிக்கு சாமான்கள் வாங்கச் செல்லும் போதெல்லாம் என் விழிகள் அந்தச் சிறுவனைத் தேடும்.

அவன் யார்? அவனுக்கும் எனக்கும் என்ன உறவு அவனை ஏன் நான் தேடவேண்டும். அவன் எங்கு போயிருந்தால் எனக்கென்ன? இவை என்னை நானே எனக்குள் கேட்டுக்கொள்ளும் கேள்விகள். ஆனால், அவனது நினைவுகள் என் மனதின் ஓர் மூலையில் உறுத்திக்கொண்டிருந்தது.

வீட்டில் என் மனைவியிடம் கூட இப்போது அடிக்கடி அவனைப்பற்றிக் கதைக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவள் என்னை விசித்திரமாகப்பார்ப்பாள்.

யாழ்ப்பாண நவீன சந்தைக் கருகாமையில் இருக்கும் அந்த 'கூல்பார்' முன்பாகத்தான் அவன் வழக்கமாக நிற்பான். சுமார் பதின்மூன்று வயதிருக்கும். அரைக்காற்சட்டை முதுகுப்புறத்தில் சற்றுக்கிழிந்த அழுக்கான 'ரீசேட்' கருமை நிறத்தோற்றம். சுருண்டு குலைந்திருக்கும் தலைமயிர். அவன் கண்கள் மட்டும் சற்று வித்தியாசமானது. சற்றுப் பெரிய, ஒளிபொருந்திய கவர்ச்சியான கண்கள். அவன் கண்களைப் பார்க்கையில் இதை எங்கோ அடிக்கடி பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படும். வீட்டில் சுவாமி அறையில் உள்ள குழலூதிக் கொண்டிருக்கும் கண்ணனின் கண்களைப் போன்றது அந்தக் கண்கள்.

கடலதை நாங்கள் வெல்லுவோம்
கடற்புலி நாங்கள் ஆளுவோம்..

இந்தப் பாடலைத்தான் அவன் அடிக்கடி பாடுவான். கணீரென்று ஒலிக்கும் குரல் இரசனைகலந்த முகபாவத்தோடு, பார்வை எங்கோ தத்திட்டுநிற்கபாடலோடு ஒன்றிப்போய் அவன் பாடுவான். பாடலில் வரும் இடையிசையினையும் டிங்டிங்...... டிங்டிங் என வாயாலேயே செய்வான்.

இந்தக் குரல்வளத்திற்கு அவன் அது எதிர்காலம் எப்படியோ அமையவேண்டியது. இவனோ இன்று பாடிப் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கின்றான். எண்ணிப் பார்க்கையின் என் மனதில் ஒரு சோகம் படரும்.

கூல்பாருக்கு வந்துபோகிறவர்கள் அவன் பாடலைக் கேட்டுவிட்டு கையில் கிடைக்கும் சில்லறையை கொடுப்பார்கள். சில 'இளவட்டங்கள்' அவனைச் சீண்டிப்பார்க்க முற்படுவதும் உண்டு. அந்நேரங்களில் அவன் வேறு எங்கும் போய்விடுவான். கடைசியாக அவனை நான் கண்டபோது பாவாடைபோல தொளதொளவென 'ஜீன்ஸ்' அணிந்து கூல்பாருக்கு முன்னால் நின்ற இளைஞர் சிலர் அவனைச் சீண்டிக்கொண்டிருந்தனர்.

'டேய் ஜேசுதாஸ் உந்தப் பாட்டை விட்டுப்போட்டு நெஞ்சுக்குள்ளே இன்னாரென்று சொன்னால் புரியுமா பாட்டைப் பாடு என்று கூறிக்கொண்டிருக்க, அவன் அந்தப் பாடல் தெரியாது விழித்துக் கொண்டிருந்தான்.

'டேய் ஐஸ்கிறீம் வாங்கித் தாரன் பாடு'

'பாடாட்டா அடிப்பம்'

'டேய் இஞ்சை வாடா பாட மாட்டியே' இவ்வாறு அந்த இளைஞர்கள் அவனை மிரட்ட அவன் கண்கள் கலங்கியிருந்தன. எனக்கு ஆத்திரம் வந்ததால் அந்த 'பாவாடை ஜீன்ஸ்' இளைஞர்களை திட்டினேன். வாக்குவாதங்கள் ஏற்பட்டு பின் தனிந்தது.

அந்த நிகழ்வுக்குப் பிறகு அவனை நான் காணவே இல்லை. அவனுடன் சில சமயங்களில் கதைத்திருக்கிறேன். அவனுடைய பெயரை நான் கேட்க மறந்து போனேன். அவனுக்கு இளைஞர்கள் சிலர் வைத்த பெயர் தான் ஜேசுதாஸ் என்பது.



ஒருநாள் அவனிடம் பேச்சுக் கொடுத்தபோது, அவன் திருகோணமலையிலிருந்து அகதியாக வந்தவனெனவும், தாய் இறந்து போன பின்பு தந்தை வேறு திருமணம் செய்து கொண்டதால் இவன் அனாதையாய்ப்போனான் என்பதையும் அறிந்து கொண்டேன்.

'தம்பி என்ர வீட்டைவாறியே சாப்பாடு சம்பளம் எல்லாந் தாறன். இங்க பாட்டுப்பாடி சேர்க்கிற காசைவிட கூடுதலாத் தாறன்' இப்படி ஒருநாள் நான் கேட்டபோது அவன் மெல்லியதாகச் சிரித்தானே தவிர பதில் ஒன்றும் சொல்லவில்லை.

புதுவருடத்திற்கு நான்கு நாள் முன்பு ஒரு காற்சட்டையும் சேட்டும் வாங்கினேன் அவனுக்குக் கொடுப்பதற்கு. மனைவி கொஞ்சம் முகம் சுழித்தாள்.

'என்னப்பா இது? ஊரிலை திரியிற பிள்ளையளுக்கெல்லாம் உடுப்பு வாங்கிக் கொடுக்கப் போறியளே' என்றாள். அவனுக்காக நான் வாங்கிய அந்த உடைகளைக்கொடுக்க முடியாமலே போய்விட்டது. அந்தக் கடைக்

காரர் சிலரிடம் விசாரித்துப் பார்த்தேன். அவர்களும் அவனைக் காணவில்லை என்றே கூறினார்கள்.

அன்றும் பெரிய கடைக்குச் சென்றபோது சாமான்கள் வாங்கியபடியே வீதியில் அவன் நிற்கிறானா என அடிக்கடி பார்த்தேன். வரும் வழியில் ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள கழிவு வாய்க்காலில் சடலம் ஒன்று கிடக்க, மக்கள் அதனைக் கூட்டமாக வேடிக்கை பார்த்தவண்ணமிருந்தனர். என் மனதுக்குள் என்னமோ செய்தது.

வீட்டுக்கு வந்தபோது, தேங்காய் எண்ணெய்ப்போத்தல் வெறுமையாக இருப்பதையும், சீனி வாங்கிக்கொண்டு வராததையும் உணர்ந்து மனைவி காரணம் கேட்டாள்.

''என்ன செய்யிறது. சீனி, தேங்காய் எண்ணெய் ஒருகடையிலேயும் இல்லை. கூடிய விலைக்கு ஒழிச்சுவைச்சு விற்கிறாங்களாம் அதுவும் எனக்குகிடைக்கேல்லை. கப்பல் வராததாலதான் இப்படியாம். எல்லாத்தையும் பதுக்கிட்டாங்கள். கப்பல் வராவிட்டால் எல்லாச் சாமான்களும் விலை கூடும் போலகிடக்கு...'' நான் சொல்லிக்கொண்டுபோக இடிந்த முகத்துடன் அவள் குசினிக்குத் திரும்பினாள்.

''இஞ்ச ஆஸ்பத்திரிக்கு முன்னால வாய்க்காலுக்க சடலம் ஒன்று கிடக்கெண்டு சனம் பார்த்துக்கொண்டு நிண்டது. சிலநேரம் அந்தப்பெடியனோ தெரியேலை''

நான் சொன்னது மனைவிக்கு கேட்டதோ தெரியவில்லை. ஏனெனில் பதில் ஒன்றும் வரவில்லை. இரவுமுழுவதும் அந்தச் சிறுவனைப்பற்றியும் அந்தவாய்க்காலில் கிடந்த சடலம் பற்றியும் நினைவுகள் மாறி மாறிச் சுழன்றவண்ணமிருந்தன.

காலையில் எழுந்ததும் அன்றைய செய்திப் பத்திரிகையைப் பார்த்தேன்.

'வடக்கில் தாக்குதலுக்குத் தயார்' புதிய தளபதி அறிவிப்பு, என்றிருந்தது. அதனை ஒரு புதினமாக வாசிக்காமல் கீழேயுள்ள செய்திகளைக் கண்ணோட்டமிட்டேன். இடது மூலையில் பிரசுரமாகியிருந்த புகைப்படமொன்று என்கவனத்தை ஈர்த்தது. பல சிறுவர் அடங்கிய படம் அது. நடுவே அந்தச்சிறுவன். ஆம்! அந்த 'யேசுதாஸ்'

'தமிழன்னையின் புதல்வர்கள்' என தலைப்பிடப்பட்ட அந்தப் புகைப்படத்திற்குக் கீழே 'நேற்று தலைவர் அவர்கள் தமிழீழ சிறுவர் இல்ல நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. சிறுவன் ஒருவன் பாடுவதையும் தலைவர் கைதட்டி இரசிப்பதையும் படத்தில் காணலாம், எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.


துள்ளியெழுந்து பேப்பருடன் ஓடினேன் மனைவிக்குக் காட்ட. ''என்ன ஓடிவாறியள் என்னவாம் பேப்பறிலை? கப்பல் வந்திட்டுதாமே'' என்றாள் ஆவலுடன்.

''அதில்லையப்பா இஞ்சைபார் படத்தை. அந்தப்பெடியன் நிற்கிறான்'' என்று காட்ட, அவள் கப்பல் வந்த செய்தி வராத சோகத்தில் ''உங்களுக்கென்ன விசரே'' என்று என்னைக்கடிந்து கொண்டாள். என்மனதில் உறுத்தலாய் இருந்த இடத்தில் மென்மையான மகிழ்ச்சியொன்று குடியேறிக்கொண்டது.

## பேர்க்கன் சிறைக் கூடம் (BERGEN BELSEN)

இதனை பெல்சன் எனவும் அழைப்பர். அரசியற் கைதிகளை அடைத்து வைப்பதற்காக பேர்க்கன் மற்றும் பெல்சன் என்ற கிராமங்களுக்கு அண்மையில் 1943-ம் ஆண்டு ஜூலையில் இச் சிறைக்கூடம் ஜேர்மன் நாசிகளினால் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில், அரசியற் கைதிகளின் முகாமாகவும் யூதர்களை இடம் விட்டு இடம்மாற்றும் முகாமாகவும் அமைக்கப்பட்டது. மேலும் இச் சிறைக்கூடம் 10000 பேரை அடக்கக்கூடியதாகவே அமைக்கப்பட்டது. ஆனால், இரண்டாம் உலகப் போர் முடிவுறும் சமயத்தில் 41,000 பேர் இதனுள் அடைத்துவைக்கப்பட்டனர். இங்கே நச்சுவாயுக்கலன்கள் இல்லாதிருந்தபோதிலும் பட்டினியாலும் கடின உழைப்பின் சோர்வினாலும் நோய் பிணிகளினாலும் 37,000 பேர் இறந்துள்ளனர். வேறெந்த ஜேர்மன் சிறைக் கூடங்களிலுமில்லாத படுமோசமான வாழ்க்கை நிலையை இங்கிருந்தவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்தது. சடலங்கள் புல்டோசர்களின் மூலம் புதைகுழிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் புதைக்கப்பட்டன. இச்சிறைக்கூட வாழ்க்கையைப் பற்றி 'ஆன் பிறாங்' என்ற கைதி எழுதிய நாட்குறிப்பு ஏடு உலகப் புகழ் பெற்றதாகும். இப் பெண்மணி 1945-ம் ஆண்டு மார்ச் மாதம் இச் சிறைக் கூடத்திலேயே இறந்தாள்.

1945 ஏப்ரல் 15-ம் திகதியன்று இச் சிறைக்கூடம் பிரித்தானியப் படைகளால் மீட்கப்பட்டது. இச் சிறைக்கூடத்திற்குப் பொறுப்பாகவிருந்த ஜேர்மன் இரகசியப் பொலீஸ் அதிகாரியான யோசெப் கிரமர் (Josef Kramer) பிரிட்டிஷ் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான். கைதிகளைக் கட்டுமீறிய மிருகத்தனமாக நடாத்தியதால் இவனை பெல்சன் சிறையின் இரத்த வெறியன் (Beast of Belsen) என அழைத்தனர்.



## உன் பணி தொடர வாழ்த்துகிறேன்

● அன்பான சாளரமே.

சென்ற இதழில் நீ தாங்கிவந்த "நான் பள்ளிச்சிறுவனாக இருந்தபோது" எனும் கருத்துக் கோவையை வாசித்தபோது மனம் நெகிழ்ந்தது. இது போன்று தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்று உனை நான் வேண்டுகிறேன். உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

வே. வசந்தன். பளை மகாவித்தியாலயம், பளை.

## சாளரத்தில் இவ்வளவு விடயங்களா!

● ஜனவரி மாத இதழில் ஆங்கிலமொழி கற்போம், அறிவுலகம், அதையும்விட பொது அறிவுப் போட்டி போன்ற விடயங்கள் சிறப்பாக இருந்தன. சாளரம் மேலும் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றேன். நான் ஜனவரி மாதம்தான் சாளரம் வாங்கினேன். இந்த சஞ்சிகையில் இவ்வளவு விடயம் அடங்கியிருப்பது இப்போதுதான் தெரியவந்தது.

செ. அமலதாஸ். கரவெட்டி மேற்கு, யா/விக்கினேஸ்வராக் கல்லூரி.

## பணி தொடரட்டும்

● ஈரகவை முடித்து மூன்றாம் அகவையில் பாதம் பதிக்கும் சாளரத்தின் பணி தொடரட்டும். சாளரம் வளரவேண்டுமென மனமார வாழ்த்துகிறேன். சாளரத்திற்கு ஆக்கங்கள் அனுப்பவேண்டுமென நீண்டநாட்களாக ஆசைப்பட்டேன். நேரமின்மையால் வாசித்துவிட்டு அப்படியே வைத்துவிடுவேன். இப்புத்தாண்டிலிருந்து இனி எழுதுவேன்.

வே. சசிகலா. கைதடி வடக்கு, கைதடி.

## கவிதை, சிறுகதை வேண்டும்

● முன்பு சாளரம் கவிதை, சிறுகதைகளையும் உள்ளடக்கியதாக வெளிவந்தது. ஆனால் தற்போது இவை இடம்பெறுவதில்லை. இக்குறைபாட்டினை தயவுசெய்து நிவர்த்தி செய்வீர்களா?

த. சுரேஸ். யா/உடுப்பிட்டி அமெ. மிசன் கல்லூரி.

## நன்மையடைந்தோம்

● ஜனவரி மாத சாளரத்தில் அறிவியல், சமூகவியல் அரசியல் ஆகிய கட்டுரைகளை நானும் என் சக மாணவிகளும் வாசித்து நன்மையடைந்தோம். இவ்விதழ் மேலும் சிறப்புற வேண்டுமென மனமாரப் பாராட்டுகிறேன்.

மா. கலையரசி. ஆண்டு 11 யா/சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை.

## அறிவுலகம்

● அறிவுலகம் பகுதியில் அளிக்கப்படும் விளக்கங்கள் எமது பல சந்தேகங்களைத் தீர்ப்பதுடன் பல உண்மைகளையும் அறியவைக்கின்றன.

இ. குகநேசன். யா/உடுப்பிட்டி அமெ. மிசன் கல்லூரி.

## கவிதை பிரசுரமானதற்கு நன்றி

● நீண்டகால இடைவெளியின்பின் சாளரத்துடன் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். சில மாதங்களாக நான் யாழ்ப்பாணத்தில் இல்லாததால் சாளரம் வாசிக்கத்தவறிவிட்டேன். பல்கலைக்கழக நூலகத்தில் சாளரம் கிடைத்தது. செப்ரெம்பர் மாத இதழில் எனது கவிதை பிரசுரமானதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தேன். கட்டுரையைப்பிரசுரித்த இதழாசிரியருக்கு நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். புத்தாண்டு வாழ்த்துக்களை சாளரத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ. அனுசியா. நீர்வேலி.

## எங்களுக்கு உதவுவதற்கு நன்றி

● சாளரம் ஆங்கிலத்திற்கு ஓரிடம் கொடுத்திருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இதனால் என்னைப்போல் சாளரம் வாசகர்களின் தொகை அதிகரிக்கும். உலகோடு தொடர்புகொள்ள ஆங்கிலம் தேவை. எங்களுக்கு உதவுவதற்கு சாளரத்திற்கு நன்றி.

ச. கார்மேகவண்ணன். பிலா அடைப்பு புலோலி தெற்கு.

## அறிவியல் ஆற்றலைப் பெரிதும் தூண்டும்

● புதிய ஆண்டில் புதுப்பொலிவுடன் புதிர்போன்ற விடயங்களைத் தாங்கி மலர்ந்த சாளரம் எம்மைப் போன்ற மாணவர்களின் அறிவியல் ஆற்றலைப் பெரிதும் தூண்டும் கருவியாக அமைகிறது. இவ்விதழானது மேலும் மேலும் சிறப்பாக மலர்ந்திட எனது வாழ்த்துக்கள்.

த. சிறிநிவாசன். ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.

## அறிவு மணம் கமழும்

● தங்கள் சாளரத்தின் ஊடாக புகுந்துவந்து அறிவு மணம் கமழும் பல்தரப்பட்ட விடயங்களை நுகரும் வாசகர்களில் நானும் ஒருவன். கடந்த மாதங்களில் ஆங்கிலம் கற்போம் என்னும் பகுதியை புதிதாக இணைத்தது மிகநல்லதாக இருக்கிறது. ஆனால் ஒரே ஒரு குறை தொடர்ந்து சிறுகதை இடம்பெறாதது. இதை அடுத்த சாளரத்தில் இடம்பெற வாய்ப்பளிப்பீர்களா?

மு. இ. மனோரஞ்சன். யா/ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயம்.

# இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெறும்
## கறுப்பின பெண் எழுத்தாளர்

இது 'சிறுபான்மையினரின் சகாப்தம்' ஐக்கிய நாட்டு சபையின் கலாச்சார பண்பாட்டு நிறுவனமான 'யுனெஸ்கோ' தனது ஆகஸ்ட் மாத 'கூரியர்' இதழை உலகில் வாழும் சிறுபான்மையினரின் இன்றைய சமகால நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் சிறப்பாக வெளியிட்டுள்ளது.

சிறுபான்மையினர் என்றால் யார்? ''தங்கள் உடலமைப்பு அம்சங்கள், அல்லது பண்பாட்டு அம்சங்கள் காரணமாகத் தாங்கள் வாழ்கின்ற சமூகத்திலிருந்து மற்றவர்களால் தனிப்படுத்தப்பட்டு, வேறுபாட்டோடும், தாழ்வாகவும் நடாத்தப்படும் போது தாங்கள் அனைவரும் பாரபட்சத்துக்கு இலக்காகி விட்டோர்கள் என்ற எண்ணம் பெறுகின்ற மக்களைக் கொண்ட பிரிவினரே சிறுபான்மையினர்.''

(லூயிஸ்விர்த், 1945)

இவ்வாறு, உருவாக்கப்படும் சிறுபான்மையின மக்களில் உலகில் பரந்துபட்டு வாழும் கறுப்பினரின் துயரவாழ்வு பதியப்படாத பக்கங்களாகவே உள்ளது. இவர்களின் கடந்தகால கதைகள், பலராலும் முழுமையாக அறியப்படவில்லை. காடுமண்டிய தென்அமெரிக்க நாடுகளிலும், கரீபியன் தீவுகளிலும் புதைபட்டு கிடக்கின்றன. தோண்டத் தோண்ட குறையாத கறுப்பர்களின் கதை சொல்லும் சருவூலங்கள்: எலும்புக் கூடுகளும், துளையிடப்பட்ட மண்டையோடுகளும் ஆகும்.

காலம் மாறுகிறது; காட்சி மாறுகிறது. கடந்த காலங்களை மீள கண்டுபிடிக்க புறப்படும் தற்காலிக சந்ததி. எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள். புதையுண்ட மக்களுக்கு உயிரூட்டும் தற்காலிக படைப்புக்கள்.

அடிமைகளாய், தெரு வீதியிலும், புகையிரதப் பாதைகளிலும் சேரிடபுறங்களிலும் தவிக்க விட்டு சென்ற வெள்ளைநிற வெறியர்களின் கொடுமைகளை அம்பலப்படுத்துகின்றனர்.

எழுச்சி கொண்ட, விழிப்புணர்வு பெற்ற சமுதாயம் எழுந்து வருகிறது. இவர்களில் முதன்மையானவர் டொனி மொரிசன்; 1993 ஆண்டுக்கான இலக்கியத்திற்குரிய நோபல் பரிசு பெறும் அமெரிக்க கறுப்பின பெண் எழுத்தாளர்.

''சம காலத்தில் இயங்கும் பெண் எழுத்தாளர்களில் ஆற்றலும், கனதியும் கொண்ட படைப்புக்களை உருவாக்குபவர்களில் சிறப்பிடம் பெறுபவர் என அமெரிக்க கறுப்பின பெண் எழுத்தாளர்களின் வரலாறு கூறும் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

இவர் ஒரு பேராசிரியர். மனிதர்களின் நடத்தைகள், மொழி, இலக்கியம் என பல்துறைப்பரப்புகளில் ஆளுமையுள்ள இவர், பிரிண்டன் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றுகிறார். ஆறு நாவல்கள் ஒரு சிறுகதை, ஒரு நாடகம், எண்ணற்ற விமர்சனக் கட்டுரைகள் என பல படைப்புக்கள் இவரால் ஆக்கப் பட்டுள்ளன.



டொனிமொரிசன்

''கவித்துவ பாணியிலான நாவல்களை உருவாக்குவதில் கைதேர்ந்தவர்'' என நோபல் பரிசு வழங்கும் சுவிடிஷ் அக்கடமியால் மதிப்பிடப்படுகிறார். 1931இல் அமெரிக்காவில் பிறந்த இவர் இடையறாது எழுதுகிறார்.

தன்னை சிறுபான்மையினரின் எழுத்தாளர் எனக் கூறிக்கொள்வதில் பெருமைப்படும் இவ்வெழுத்தாளர், சமூகத்தின் ஏற்றத்தாழ்வு, இதனால் கிளர்ந்தெழும் கோபம், சுய அடையாளம், சமூகத்தின் கலாச்சார விழுமியங்கள், தன் சமூகம்சார்ந்த உள-அக முரண்பாடுகள், 'நவீன' சமுதாயப் பிரச்சினைகள் எனப்பல எண்ணற்ற தளங்களை உருவாக்கி, நுட்பமான உணர்வுகளை பதியவிடும் ஒரு எழுத்தோவியர் என விமர்சகரால் விமர்சிக்கப்படுகிறார்.

–Tar baby- இரண்டு கறுப்பின சகபாடிகளின் உள்ளார்ந்த உறவினை கையாளும் நாவல். இரண்டு பேருமே இனத்துவ ரீதியாக சுரண்டப்படுவதை உணராத சோகம்; வெகு அலாதியாக கையாளப்படுகிறது.

-Jazz- 1920, 1930களில் நிலவிய கறுப்பின மக்களின் நகர வாழ்க்கையை படம் பிடிக்கிறது. உள்ளார்ந்த ரீதியாக ஒரு சோக உணர்வை அதிரப் பண்ணும் இந்த நாவல், ஒரு வெற்றிப் படைப்பு. உயிரோட்டத்துடன் உலாவி வரும் மக்கள் தங்கள் கதையை தெளிவாகச் சொல்கிறார்கள்.

–The Bluesteye- ஒரு இளம் பெண்ணின் கதை கறுப்பராக பிறந்துவிட்ட கவலை, இடர்கள், சவால்கள் என எதிர்கொள்ளும் நாளாந்த வாழ்வு. தெளிவாகச் சித்தரிக்கப்படுகிறது.

மற்றும் Sula, Song of Soloman என இவரின் நாவல்கள் தொடர்கின்றன...



க. நகனேந்திரன்

இவரின் மொத்தப் படைப்புக்களும், கறுப்பின மக்களின் வாழ்க்கை நிலையை, தியாகங்களை எங்கள் கண்முன் நிறுத்துகின்றன.

துடிப்பும், நம்பிக்கையும், இடையறாத சிந்தனையும் கொண்ட இவர் தனது அனுபவத்தை படைப்பிலக்கிய செயல்முறைகளை தெளிவாகக் கூறுகிறார். ''என் படைப்புக்கள் உள் மன வெளியில் தோன்றும் பொறிகள்''

''பொறிகள் தட்டியெழுப்பப்படும் உணர்வுகள் என்னை எழுதத் தூண்டுகின்றன''

''அழகு, அழுக்கு என்பன என் படைப்பிலக்கிய கருப்பொருட்கள். பலராலும் எழுதப்படாத அம்சங்களை தொட்டுச் செல்வதே என் முழுக்கவனம்''

மேலும் கூறுவதாவது:

''நான் எழுதத் தொடங்கும் போதே முழு வோட்டத்தையும் அறிவேன். இது கடினமில்லை. யாரும் ஒரு கதையை வளர்த்துச் செல்லலாம். ஆனால், நடமாடவிடும் பாத்திரங்களுக்கு உயிரூட்டுவதும், இடை வெளிகளை நிரப்புவதும், பாத்திரம் பொருத்தப்பாடுகளை உருவாக்குவதும் கடினம் என்னிடம் உள்ளவை இருபத்தாறு எழுத்துக்களோ, இசையோ, நிறங்களோ என்னிடம் இல்லை. ஒரு படைப்பிரிவில் இசையையும், நிறங்களையும், இரத்தமும் சதையுமுள்ள மனிதர்களை வாசகனுக்குக் காட்டுவதே என் முழுத்தொழிற்பாடு'' என தனது செயற்பாடுகளை தெளிவாக முன் வைக்கின்றார்.

சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெறும் இவரின் படைப்புக்கள் மூலம் தான் சார்ந்த சமூகத்தின் பிரச்சனை மையங்களை, ஒடுக்கு முறைகளை, வேற்றுமைகளை உலகுக்கு திரையிட்டுக் காட்டுகிறார்.

இனத்தின் விடுதலைக்காக, தனது ஆற்றல்கள், அனுபவங்களை ஒருமுகப்படுத்தி ஓங்கி குரல்கொடுக்கும் இவர் ஒரு வழிகாட்டி, கலைஞர், போராளி.

வை. ஜெயமுருகன்

---

**உளவியல்** (2-ம் பக்கத் தொடர்ச்சி)

றவை இத்தகைய செயல்களுக்கு உதாரணமாகும். சிலர் தம்முடலில் சில உறுப்புக்களில் நோய் இருப்பதாக நம்பி (Hypochondriasis) ஒவ்வொரு நாளும் வெவ்வேறுவிதமான அறிகுறிகளைக் கூறுவர்.

மேற்கூறியவைகள் எல்லாம் சிந்தனைக்குழப்பத்தால் தோன்றும் மிக முக்கியமான மனநோய் அறிகுறிகளாகும். இத்தகைய குழப்பங்கள் மனிதனது மனதிலே உருவாகி, வளர்ந்து பின்பு வெளிப்படுகின்றன. ஆனால் மனநோயாளி இதை உணர்வதில்லை.

---

# பொஸ்னியாவின் இனப்படுகொலையை முடிவுக்குக்கொண்டுவர முடியுமா?

உலக மகாநாடு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோருகின்றது. றமன் ஸ்பேர்டோ மனித உரிமைகள் உலக மகாநாடு; ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் ''பொஸ்னியா ஹேர்ஸே - கொவினாவில் (Bosnia - Hercegovina) முன்னொரு போதும் இல்லாதவாறு இடம்பெறும் இனப்படுகொலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது'' வெளிவிவகார அமைச்சர்களால் பிரதி நிதித்துவம் செய்யப்பட்ட



பொஸ்னியாவின் துப்பாக்கி குண்டுகளுக்கு மத்தியில் அகதிகளுக்கான உணவு விநியோகம் நடைபெறுவதை இப்படத்தில் காணலாம். உணவு விநியோகத்தின் போது பெண்மணியொருவரின் தாங்கமுடியாத சோகம் அழுகையாக பீறிடுகிறது.

இஸ்லாமிய மகாநாடு நிறுவனத்தின் பிரதிநிதிகள் அந்தப் பிரேரணையை பொஸ்னிய வெளிவிவகார அமைச்சர் ஹரிஸ் சிலாஜ்டிஸ்சி விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இப் பிரேரணையை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டார்கள்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் ஜனாதிபதி எலிஜா ஸ்பெகோவிக் (Elija Izbegovic) பொஸ்னிய முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஆயுதத் தடையை நீக்குமாறு சர்வதேச சமூகங்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இருபதாயிரம் பேர்கள் கொல்லப்பட்டனர். ஒரு கோடிக்கு மேலானவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான நகரங்களும், கிராமங்களும் அழிக்கப்பட்டன.

''ஆயுதத் தடையை நீக்கின் இக்கட்டான நிலையை மோசமாக்குமா'' என்று வினாவியதற்கு ''இன்றிலும் பார்க்க எவ்வாறு மோசமாக்கும்'' என அவர் பதிலளித்தார்.

பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் அந்த வேண்டுகோளை ஆமோதித்தார். டொமினிகன் குடியரசின் (Dominican Republic) அமைச்சர் அந்தத் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமை மீறல் விவகாரத்தில் தீர்மானம் எடுப்பின் அது பொஸ்னியாவில் நேரடியாகச் செயற்படுவதாகவே கருத முடியும். தற்சமயம் இச்சபை மனிதாபிமான விதிகள் மீறப்படுவதை சுட்டிக்காட்டும் அதிகாரம் மட்டுமே தன்னிடம் உள்ள அடிப்படைக் கொள்கையெனக் கூறுகின்றது இது அச்சபையின் ஆயுத ரீதியான தலையீட்டைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது, என பல மனித உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

# பொது அறிவுப்போட்டி - 2

வாசகர்கள் கீழ்வரும் பத்துக் கேள்விகளுக்கும் தரப்பட்டுள்ள பதில்களில் சரியானவற்றைத் தெரிவு செய்து எழுதியனுப்பவேண்டும். மார்ச் 5 ஆம் திகதிக்குப் பிந்தாமல் உங்கள் பதில்களை எமக்கு அனுப்பி வைத்தல் முக்கியம். சரியான பதில்களை அனுப்பி வைப்போரில் அதிஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு எழிலகம் வழங்கும் 250/-, 150/-, 100/- பெறுமதியான அன்பளிப்பு மடல்கள் அனுப்பி வைக்கப்படும். அம் மடல்களைக் கொண்டு உங்களுக்குத் தேவையான பொருட்களைஎழிலகத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விகள்:**

1. மன்னன் பண்டாரவன்னியனின் வீரத்தைப் போற்றும் வாசகம் ஒன்று பிரித்தானிய தளபதி ஒருவனால் எழுதி வைக்கப்பட்டதாகக் கருதப் படுகிறது. அது,
   1) வவுனியாவில் உள்ளது
   2) பனங்காமத்தில் உள்ளது.
   3) கற்சிலைமடுவில் உள்ளது.
2. எல்லா நோயாளிகளுக்கும் இரத்ததானம் செய்வதற்கு பொருத்தமான இரத்தவகை.
   1) 'O' வகை, 2) 'A' வகை, 3) 'B' வகை.
3. 'வீனஸ்' என்றழைக்கப்படும் கிரகம்,
   1) செவ்வாய், 2) சந்திரன், 3) வெள்ளி.
4. 1977-ம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி காஸ்வல் என்பவர் யாழ். ஆல்லைப்பிட்டியில் அகழ்வாய்வு செய்து பெருந்தொகையான பாத்திரங்களைக் கண்டெடுத்தார். அப்பாத்திரங்கள்,
   1) இந்தியாவினுடையது,
   2) ஜப்பானுடையது, 3) சீனாவினுடையது.
5. புற ஊதாக்கதிர்கள் (Ultra Violet Rays) மூலம்
   1) எமது தலைமுடி வளர்கிறது.
   2) எமது தோல் உயிர்ச்சத்து 'D'யை தயாரித்துக்கொள்கிறது.
   3) உயிர்ச்சத்து 'B' எமக்கு அதிகளவு கிடைக்கிறது.
6. நீரில் கலக்கப்படும் குளோரினால் (Chlorine) இந்நோய் உண்டாகலாம் என அமெரிக்க மருத்துவ ஆய்வொன்று கூறுகிறது.
   1) வாந்திபேதி. 2) புற்றுநோய்.
   3) தைபோயிட்.
7. 1996ஆம் ஆண்டின் ஒலிம்பிக்போட்டிகள் இங்கு நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.
   1) அட்லாண்டா (அமெரிக்கா)
   2) சிட்னி (அவுஸ்திரேலியா)
   3) மொஸ்கோ (ரஷ்யா)
8. தமிழீழ தேசியத்தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்தில் இனக்கலவரங்களினால் நடந்த துயரமான சம்பவங்கள் தன்மனத்தைப் பாதித்தது என ஒரு பேட்டியின் போது கூறியுள்ளார். அக்கலவரம்,
   1) 1948இல் நடந்தது. 2) 1958இல் நடந்தது.
   3) 1983 இல் நடந்தது.
9. வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழுகின்றவர்களின் இலக்கியம் இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
   1) அகதி இலக்கியம். 2) எதிர்ப்பிலக்கியம்.
   3) புலம்பெயர்ந்தோர் இலக்கியம்.
10. பூமி உட்பட அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாகக் கொண்டு சுற்றுகின்றன என்ற கொள்கையை முதன்முதலில் வெளியிட்டவர்.
    1) அல்பேட் ஐன்ஸ்ரீன்.
    2) நிக்கலஸ் கொப்பனிக்கஸ்.
    3) மார்சல் டிட்ரோ.

(கேள்விகளுக்கான பதில்கள் கடந்த சாளரம் இதழ்களிலேயே உள்ளன.)

**பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

பொது அறிவுப்போட்டி,
'சாளரம்',
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

---

## ஜனவரி மாத பொது அறிவுப் போட்டி Iக்கான விடைகள்

1. பூமி சூரியனைச் சுற்றுகிறது எனக்கூறிய கியாடானோ புருனோ என்ற விஞ்ஞானிக்கு- உயிரோடு எரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.
2. நரம்புத்தளர்ச்சி சம்பந்தப்பட்ட ஓர் உளநோய் பயம் - பதற்றம்.
3. உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் தொங்குதோட்டம் கி. மு. 6ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.
4. அண்மையில் இலண்டன் சென்று 'சிம்பனி' இசைவடிவத்தைப்படைத்த இசையமைப்பாளர் இளையராஜா.
5. 'பிக்பென்' என்பது புகழ்பெற்ற கடிகாரம்
6. 'போர் உலா' என்ற நூலை எழுதியவர் கப்டன் மலரவன்
7. 'மைக்கிறேன்' என்பது ஒரு வகைத் தலைவலி
8. அமெரிக்காவின் உளவு அமைப்பு சீ. ஐ. ஏ.

ஏராளமான வாசகர்கள் போட்டியில் பங்குபற்றி இருந்தனர். அவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியனுப்பியிருந்தனர். சரியான விடையை எழுதியனுப்பியவர்களில் அதிஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டு பரிசில்களைப் பெறுவோர் விபரம் பின்வருமாறு:-

**முதலாம் பரிசுக்குரியவர்:-**
செல்வன் ஜி உமாகாந்,
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

**இரண்டாம் பரிசுக்குரியவர்:-**
வேலுப்பிள்ளை பரிமளகாந்தி,
70/7, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசுக்குரியவர்:-**
செல்வன் சோ. முரளிதரன்,
இல. 36, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இவர்களுக்கு முறையே 250/-, 150/-, 100/- பெறுமதியான, எழிலகம் வழங்கும் அன்பளிப்பு மடல்கள் அனுப்பி வைக்கப்படும். இம் மடல்களைக் கொண்டு தமக்கு விருப்பமான பொருட்களை யாழ். எழிலகம் நிறுவனத்தில் இவர்கள் கொள்வனவு செய்யலாம். இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். போட்டியில் பங்குபற்றி சரியான விடைகளை எழுதியனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

சகல விதமான அச்சுவேலைகளுக்கும்

# புதுயுக அச்சகம்
## NEW ERA PRESS

எல்லா விதமான உங்கள்
அச்சு வேலைகளையும் தரமாகவும்
கவர்ச்சிமிக்கதாகவும் செய்துகொள்ள
எம்மை நாடுங்கள்

# புதுயுக அச்சகம்
## NEW ERA PRESS

வண்ணார்பண்ணை,

யாழ்ப்பாணம்.



இப் படத்திற்கான உங்கள் கவிதை வரிகளை எழுதி அனுப்புங்கள்